THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Tuesday, 31st March 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Collection of Show Tax and Entertainment Tax (Empowering the Municipalities)

* 4 *S.N.Q.*—SRI T. P. ALAGAMUTHU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received resolutions adopted by several Municipal Councils to empower them to reduce the amount of show tax and the entertainment tax levied for cinematograph exhibitions; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No. Sir.

(*b*) Does not arise.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இந்த காட்சி வரி, கேளிக்கை வரி எந்த அளவுக்குப் போடலாம் என்று அரசினர் ஆணை கூறுகிறது. எந்த அளவிற்கு என்று சொல்லும்போது 300 சத வீதம் போடலாம் என்று கூறுகிறது. எங்கள் பகுதியில் குறைந்த அளவுக்குப் போடவேண்டுமென்று 150 சத விகிதம் போடவேண்டுமென்று போட்டு அதைப் பற்றி அரசினர் கெஜட்டில் விளம்பரப்படுத்த வேண்டுமென்று அரசினருக்கு அனுப்பியபோது நாங்கள் குறிப்பிட்ட வரையறை வரை போட வேண்டுமென்று சொல்லி அதைத் திருப்பி அனுப்பினார்களே ஏன் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்ட். அதைப் பற்றி அவர்களைக் கேட்டால் தான் சொல்ல முடியும்.

நீர்ப்பாசன வசதி, கள்ளக்குறிச்சி வட்டம்

* 442 **கேள்வி—திரு. எல். ஆனந்தன் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

கள்ளக்குறிச்சியில் வடக்குப் பகுதியில் உள்ள பாக்கம், ரிஷிவந்தியம், சங்கராபுரம் பிர்க்கா போன்ற வரண்ட பிரதேசங்களுக்கு சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து வலதுபுறம் ஓர் வாய்க்கால் வெட்டி நீர்ப்பாசன வசதி செய்ய அரசாங்கத்துக்கு உத்தேசமுண்டா ?

[31st March 1964

THE HON. SRI R. VENKATARAMAN : There is no proposal to excavate a canal from Sathanur Reservoir to provide irrigation facilities to Pakkam and other places mentioned by the Member.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பாக்கம் சங்கராபுரம் போன்ற அந்தப் பகுதிகளுக்கு இந்தக் கால்வாயை விஸ்தரிக்காவிட்டாலும் சாத்தனூர் அணையின் வட பகுதியிலிருந்து செஞ்சி பகுதிக்காவது கால்வாயை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது இருக்கும் தகவலில் சாத்தனூர் ரிசர்வாயர் தண்ணீரானது இப்போது இருக்கிற ஆயக்கட்டுக்கும், மேற்கொண்டு இப்போது இருக்கிற ஆயக்கட்டை ஸ்டெபிலைஸ் செய்யவும் தான் போதும் என்று புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். விஸ்தரிப்பதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நாங்கள் எப்போதுமே சாத்தனூர் நீரைத்தான் எதிர்பார்த்திருக்கிறோம். எங்களுக்கு கிடைக்குமா கிடைக்காதா என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனிக் கேள்வி போட்டால் தண்ணீர் இருக்கிறதா என்று பார்த்துச் சொல்ல முடியும். இப்போது இருக்கும் தகவல்படி போதிய அளவுக்குத் தான் இருக்கிறது. விஸ்தரிப்பதற்கில்லை என்று இருக்கிறது.

கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள்

* 446 கேள்வி—திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளை குடி அமைக்கக்கோரி மத்திய சர்க்காரிடமிருந்து சென்னை சர்க்காருக்கு தகவல் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், என்ன முடிவு எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) The matter is under examination.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளை ராமநாதபுரம் ஜில்லாவிலே குடியேற்ற வசதி இல்லை என்று ராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் அவர்கள் அரசாங்கத்திற்கு தெரிவித்தார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான தகவல் சர்க்காரிடத்தில் இல்லை. இப்போதுதான் அவர்களை எந்தெந்த இடங்களில் ரீஹாபிலிடேட் செய்ய முடியும் என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

31st March 1964]

திரு. பி. கே. மூக்கையா தேவர் : ஸார், அகதிகள் என்று சொல்லுகிறபோது கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வருகிறவர்கள் மட்டும்தான் அகதிகளா? சிலோன், மலேயா போன்ற பகுதிகளிலிருந்து விரட்டப்பட்ட தமிழர்கள் வருகிறார்களே அவர்கள் அகதிகளாகக் கருதப்படுவதில்லையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது மத்திய சர்க்காரிலிருந்து வந்திருக்கிற கோரிக்கை கிழக்கு பாகிஸ்தானிலிருந்து விரட்டப்பட்டவர்களுக்கு ஏதாவது நம் நாட்டில் உதவி செய்யவேண்டும், எந்த இடத்தில் ரீஹாபிலிடேட் செய்ய முடியும் என்பதைப் பற்றிய கோரிக்கைதான். மற்றபடி இலங்கை, மலேயா போன்ற இடங்களிலிருந்து வருகிறவர்களைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் என்ன உதவி செய்ய முடியும் என்று பார்த்துச் சொல்லலாம்.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளைப் பராமரிக்க ஆகும் செலவிற்காக மத்திய சர்க்கார் மாகாண சர்க்காருக்கு ஏதாவது மான்யம் கொடுக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தச் செலவுகளை மத்திய சர்க்கார் முழுதும் ஏற்றுக்கொள்ளும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட்ட அகதிகள் பூர்வீகமாக எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களெல்லாம் ஒரு காலத்தில் நம்முடைய நாட்டுப் பிரஜைகளாக, வங்காளத்தின் பிரஜைகளாக இருந்தவர்கள். பாகிஸ்தான் பிரிவினையினால் பாகிஸ்தான் பிரஜைகளாக மாறினார்கள். அந்தப் பிரதேசத்தில் இவர்கள் சிறுபான்மையோர்—மைனாரிட்டீஸ். அங்கிருந்து விரட்டி அடிக்கப்படுகிறார்கள். ஆகையால் அங்கிருந்து நம் நாட்டுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள்.

Rebate on sale of handloom cloth

* 448 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that some Weavers' Co-operative Societies in Ramanathapuram district have made fraudulent claims for rebate on the sale of handloom cloth during 1957–59 to the tune of several lakhs of rupees;

(*b*) if so, the names of these societies and the nature of the irregularities committed:

(*c*) whether the Government have taken any action on the cases reported by the Registrar of Co-operative Societies; and

(*d*) if so, the details thereof?

[31st March 1964

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) *to* (*d*) A statement[a] is placed on the Table of the House.

திரு. கரு. சீமைச்சாமி : இந்தமாதிரி மோசடி செய்த கூட்டுறவு சங்கங்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் இந்த ஸ்டேட்மெண்டில் எலாபரேட்டாக எழுதி வைத்திருக்கிறோம். மோசடி நடக்கவில்லை. நடப்பதற்கு முன்னால் தடுத்து விட்டோம். அதைத்தான் கனம் அங்கத்தினர் புரிந்துகொள்ளவேண்டும். அவர்களெல்லாம் தவறான, ஃபால்ஸ் ரிபேட் க்ளெயிம் போட்டார்கள். நாம் அவைகளை அனுமதிக்கவில்லை. நாம் கொடுத்திருந்தால் அப்போது அது மோசடி, மோசடி நடந்து விட்டது என்று சொல்லலாம். ஆனால் நாம் கொடுக்கவில்லை. உடனடியாக பரிசீலனை செய்து நிறுத்திவிட்டோம்.

திரு. து. ப. அழகமுத்து : இந்தமாதிரி அவர்கள் ஃபால்ஸ் க்ளெயிம் செய்ததை ஏதாவது புகார் வந்ததன் மீது பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அல்லது சர்க்கார் தணிக்கை முறையிலே அது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏதோ ஒரு நாள் அசெம்பிளியில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது ரிபேட் க்ளெயிமைப் பார்த்துக்கொண்டிருந்தேன். திடீரென்று ராமநாத புரத்திலும், இன்னும் இரண்டு பகுதிகளிலும் விற்பனை ஆகிற அளவுக்கு அதிகமாக ரிபேட் வந்த மாதிரி தெரிந்தது. அதை மார்க் பண்ணி நிர்வாக அதிகாரிகள் இதைப் பற்றிப் பரிசீலனை செய்யவேண்டுமென்று எழுதி அனுப்பினேன். இந்த முறையில் நான்தான் முதலில் இதைக் கண்டுபிடித்தது. தணிக்கை யெல்லாம் பின்னால் தான் நடந்தது.

* 449 *Q*.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the results of investigation into the alleged fraudulent claims for rebate on the sale of handloom cloth by Weavers' Co-operative Societies in Tirunelveli district have been received; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) A statement[b] explaining the position is placed on the Table of the House.

அக்கினி ஆற்றில் அணை கட்டுதல்

* 451 கேள்வி—திரு. பி. முருகையன் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

a Printed as Appendix I on pages 842–847.
b Printed as Appendix II on pages 847–849.

(அ) திருச்சி, தஞ்சை மாவட்ட எல்லையில் இருக்கும் கரம்பக்குடிக்கு அருகில் உள்ள அக்கினி ஆற்றில் அணை கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) அதற்கு வேண்டிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு விட்டனவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The scheme is under investigation. Plans and estimate will be prepared after the investigation is completed.

திரு. பி. முருகையன் : *தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தால் எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *4,207 எக்கருக்கு இதனால் நன்மை ஏற்படலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.*

திரு. பி. முருகையன் : *தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தால் அதிகப்படியான நிலங்கள் சேதம் அடைகின்றன என்று எந்த அரசியல் கட்சியாவது மாநாடு நடத்தி தீர்மானம் அனுப்பி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : குறிப்பாகச் சொல்ல முடியாது. பொதுவாக இந்தத் தண்ணீர் திட்டங்களெல்லாம் வேண்டுமென்று சொல்லுவதற்கு மாநாடு நடத்துவது நம் நாட்டின் பழக்கம்.

நீர்ப்பாசன வசதிகள் (விருத்தாசலம் தாலுகா)

* 452 கேள்வி—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுகாவிலே "சின்னத்துவாரி" ஓடையில் ஒரு அணை கட்ட உத்தேசமுண்டா ?

(இ) விருத்தாசலம் தாலுகா பெண்ணாடம் பிர்க்கா கோனூரில் உள்ள பழைய நீர்ப்பாசன ஏரியை மறுபடியும் புதுப்பிக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) சின்னத்துவாரி ஓடையில் 6/6 மைலில் ஒரு மட்டம் சுவரும் இடது கரையில் அதையொட்டி ஒரு தலைமடையும் கட்டப்பட்டுள்ளன. அந்த தலைமடையிலிருந்து கோனூர் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு போக 2,500 அடி நீளமுள்ள ஒரு கால்வாயும் வெட்டப்பட்டுள்ளது.

(இ) ஏரி 1949-50-ல் புதுப்பிக்கப்பட்டது.

திரு. கி. நாராயணசாமி பிள்ளை : தலைவர் அவர்களே, இதற்காக எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது முடிந்து போய் விட்டது. எவ்வளவு தொகை என்ற கணக்கு என்னிடத்தில் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின் போது ஒவ்வொரு அங்கத்தினரும் அந்தந்த ஊரில் எந்தெந்த ஆற்றில் அணைக்கட்டு கட்ட உத்தேசம் உண்டா என்று கேட்பதைக் காட்டிலும், பொதுவாக தமிழகத்தில் ஒரு சர்வே செய்து, எந்த ஆறுகளில் அணைக்கட்டுகள் கட்டுவது, அவைகளில் எவைகள் கட்டி முடிந்துவிட்டன, எவைகள் கட்டாமல் பாக்கி இருக்கின்றன என்ற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் சொல்லலாம் அல்லவா?

MR. SPEAKER: The hon. Member must put a question and not go on offering remarks.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது மாத்திரமல்ல. அப்படிச் செய்தால் அங்கத்தினர்களுக்கெல்லாம் வேலை இல்லாமல் போய்விடுமே என்று எனக்குக் கொஞ்சம் கவலை. (சிரிப்பு).

கிராம அதிகாரிகள்

*460 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கிராம அதிகாரிகள் சங்கத்தார் சர்க்காருக்கு கோரிக்கைகள் ஏதேனும் சமீபத்தில் முதல் அமைச்சரிடம் கொடுத்தனரா?

(இ) ஆமெனில், என்னென்ன கோரிக்கைகள்?

(உ) அவைகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட இருக் கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) (உ) பதில்[a] சபையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து: சபை முன்பு வைக்கப்பட்டுள்ள பதிலில் கிராம அதிகாரிகள் ஏறத்தாழ 15 கோரிக்கைகளை சர்க்காரிடம் கேட்டிருக்கிறார்கள். இதில் பல கோரிக்கைகள் அவர்கள் நீண்ட நாட்களாக கேட்டுக்கொண்டு வருபவை ஆகும். இது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னால், எப்பொழுது இந்த பரிசீலனை முடிவு பெறும்? கிராம அதிகாரி களுடைய கோரிக்கைகள் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

[a]849–851-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

31st March 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிதி சம்பந்தமான கோரிக்கைகளெல்லாம் கொஞ்சம் காலதாமதமாகத் தான் பரிசீலிக்கப்படும். ஏனென்றால், இவர்கள் கேட்கும் கோரிக்கைகளெல்லாம் சர்க்காருடைய செலவு இனங்களை அதிகரிக்கக்கூடிய கோரிக்கைகளாக இருக்கின்றன. அவைகள் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கிராம அதிகாரிகள் வருஷா வருஷம் சம்பள உயர்வு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அதைப் புறக்கணித்துக் கொண்டு வருகிறது. இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கத்தினிடம் இவர்களை முழுநேர ஊழியர்களாக வைத்துக் கொள்ளவேண்டும் என்ற ஒரு கொள்கை இருந்தது. அது எந்த அளவில் இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களை முழுநேர ஊழியர்களாகச் செய்யவேண்டுமென்ற கொள்கை இல்லை. அரசாங்கத்தினிடம் இருந்தது அந்த ஆலோசனை. அது இன்னும் இருந்துகொண்டிருக்கிறது.

ஆத்தூர் பஞ்சாயத்து—புதிய ரோடு அமைத்தல்

* 461 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டத்திலுள்ள ஆலத்தூர் பஞ்சாயத்து யூனியனில் கண்ணப்பப்பாடியிலிருந்து செட்டிகுளம் வரை புதிய ரோடு அமைக்க நில ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கை சர்க்காரால் நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறதா ?

(இ) மேற்படி ரோடு வேலை பாதி முடிந்து பாக்கியிருப்பதால் அவ்வேலை பூர்த்தியாவதற்கு நில ஆர்ஜிதத்திற்குள்ள தடை விரைவில் நீக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) பரிசீலனையில் இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : இந்தப் பாதை போடுவதற்கு கொடுக்கப்பட்டிருந்த 'ஸ்டே'-யை 'கான்ஸல்' செய்யவேண்டும் என்று கொடுத்த பெட்டிஷன் கலெக்டர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, கலெக்டர் அவர்கள் அந்த 'ஸ்டேயை' 'வெகேட்' செய்வது அவசியம் தான் என்று வற்புறுத்தி எழுதி, மற்ற எல்லா அதிகாரிகளும் அதை ஆதரித்து எழுதி அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், சர்க்கார் நீண்ட காலதாமதம் செய்து வருவதால், இந்தப் பாதை போடமுடியாதபடி, அதற்காக செலவிடப்பட்ட பணம் வீணாகப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த ஸ்டேயை உடனே நீக்குவதற்கு சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 'டி.ஆர்.ஓ', ரெவின்யூ போர்டிலிருந்து சமீபத்தில் தகவல் வந்திருக்கிறது. அதன் மீது சர்க்கார் ஆவன செய்யும்.

[31st March 1964

திரு. இரா. நாராயணன்: பொதுவாக, நிலம் ஆர்ஜிதம் செய்யும் வகையில் அரசாங்கம் மிகவும் காலதாமதத்தை உண்டு பண்ணுவதால், கிராம மக்களுக்கு வசதி செய்ய முடியவில்லை. அதைப்பற்றி அரசாங்கம் கூடியவிரைவிலே கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தனிப்பட்டவர்களுடைய நிலங்களாக இருக்கலாம். '4 (1) நோடிபிகேஷன், 5 (ஏ) என்குயரி, 6 (1) நடவடிக்கை' ஆகிய வகைகளில் நடவடிக்கை எடுத்து, அவைகளுக்கு என்ன 'அப்ஜெக்ஷன்' சொல்லுகிறார்கள் என்று கேட்டுத்தான் நாம் செய்யவேண்டும். அவைகளை வேகமாகச் செய்யக்கூடாது. நிதானமாகத்தான் அவைகளைச் செய்ய வேண்டும்.

திரு. இரா. நாராயணன்: வேப்பூர் பஞ்சாயத்து யூனியனில் இரண்டு வருஷம் ஆகிறது ஒரு நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று சொல்லி. நாளது வரையிலும் எந்த நடவடிக்கையும் இல்லை. அதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. எழுதி அனுப்பினால், வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ம. கமலநாதன்: 1952-ல் தேசீய விஸ்தரிப்புத் திட்டம் அமுலுக்கு வந்தபொழுது, கிராம மக்கள் ஆர்வத்தின் காரணமாக நில ஆர்ஜிதம் செய்யப்படாமல் கூட, ரோடுகள் போட்டும், கிணறுகள் வெட்டியும், கட்டடம் கட்டியும் இருக்கிறோம். ஆனால், அந்த நிலங்கள் இதுவரையில் ஆர்ஜிதம் செய்யப்படாமல் இருக்கிறது. அதற்காக, பொதுவாக சர்வே செய்து, அவைகளையெல்லாம் பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றுவதற்கு தனியாக ஒரு சட்டம் இயற்ற அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இம்மாதிரி ஆலோசனை இப்பொழுது சர்க்காரிடம் இல்லை. சாதாரணமாக ரொம்ப ஆர்வத்தோடு அங்குள்ள மக்கள் இப்படிப்பட்ட நன்மைகளை கிராமங்களில் செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சர்க்கரை உற்பத்தி

* 462 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் சர்க்கரை (sugar) உற்பத்தியைப் பெருக்க அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா?

(இ) ஆமென்றால், விவரமென்ன?

THE HON. SRI P. KAKKAN: (a) Yes.

(b) As against the All-India Target of 33·00 lakhs tonnes for sugar production for 1963–64, the State has been allotted 1,40,000 tonnes of sugar and this target has been suitably allocated between the different sugar factories in this State. It is expected that the target will be achieved.

31st March 1964]

(அ) ஆம்.

(இ) 1963-64-ம் ஆண்டுக்கான அனைத்திந்திய சர்க்கரை உற்பத்திக் குறியளவான 33·00 லட்சம் டன்களில் இந்த மாநிலத்திற்கு 1,40,000 டன் சர்க்கரை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது இம் மாநிலத்திலுள்ள பற்பல சர்க்கரை ஆலைகளுக்கிடையே ஏற்றவிதமாக பிரித்து ஒதுக்கப்பட்டுள்ளது. இக்குறியளவினை சாதித்து விடலாம் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

Veterinary College

* 463 *Q.*—SRI M. KALYANASUNDARAM AND SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to open another Veterinary College in the State;

(*b*) if so, the year in which and the place where it is proposed to be opened; and

(*c*) the present stage of the proposal to start a Veterinary College in Tiruchirappalli district?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*c*) The necessity for opening a second Veterinary College in the State is being examined by the Government.

(அ)—(உ) இந்த மாநிலத்தில் மேலும் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியைத் திறப்பதற்கான அவசியத்தை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

திரு. து. ப. அழகமுத்து : பரிசீலனை முடிவு பெற்று கால்நடை வைத்தியக் கல்லூரி ஏற்படும்பொழுது, திருச்சிராப்பள்ளியில் ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை செய்து பின்னாலே எந்த ஜில்லாவில் எந்த இடத்தில் வைப்பது என்பது பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : ஏற்கனவே விவசாயக் கல்லூரி மதுரையிலே ஆரம்பிக்கிற காரணத்தினால், அதையொட்டி கால்நடை மருத்துவக் கல்லூரியையும் அங்கே ஆரம்பிப்பதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கெனவே விவசாயக் கல்லூரி இந்த ஜில்லாவுக்கு வந்திருக்கிறது. கால்நடை மருத்துவக் கல்லூரி எந்த ஜில்லாவில் வைக்கவேண்டும் என்பது பின்னால்தான் பரிசீலனை செய்யப்பட்டு, முடிவு எடுக்க வேண்டும். அதைப்பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்ல முடியாது.

MR. SPEAKER : I expect 13 or 14 supplementaries, one supplementary for each district.

[31st March 1964

திரு. கரு. சீமைச்சாமி : ஏதாவது புதியதாக கல்லூரி அல்லது வேறு தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டுமென்றால், நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. ராமநாதபுரம் ஜில்லாவில் அந்தப் பிரச்னை இருக்காது. இதைப் பொறுத்தாவது அந்தக் கல்லூரியை அங்கு வைப்பதுபற்றி யோசிப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது இருக்கும் நிலைமையில் எந்தவிதமான இறுதி முடிவும் சொல்லிவிட முடியாது.

திரு. வை. சங்கரன் : பட்டிவீரம்பட்டியில் இதை வைப்பதற்கு மதுரை ஜில்லாவில் அங்கு இருக்கும் பிரமுகர்கள் நிலம் வகையறுக்கள் அளிப்பதற்கு முன்வந்திருப்பதை சர்க்கார் ஏற்றுக்கொண்டு, அங்கு வைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. அதைப்பற்றி பின்னால்தான் பரிசீலனை செய்யவேண்டும்.

ஊத்தங்கரை மருத்துவ மனை (விஸ்தரிப்பு)

*464. **கேள்வி—திரு. ம. கமலநாதன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஊத்தங்கரை, சப்-தாலூகாவாக (Sub-taluk) இருப்பதால் அங்குள்ள மருத்துவ மனையை விஸ்தரிக்கும் உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஊத்தங்கரையிலுள்ள பஞ்சாயத்து யூனியன் இங்கிலீஷ் மருந்தகத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தை மருத்துவத்துறை டைரக்டர் யோசித்து வருகிறார்.

திரு. ம. கமலநாதன் : மாவட்ட மருத்துவ அதிகாரி தணிக்கை செய்கிற நேரத்தில் இந்த ஆஸ்பத்திரியில் சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய மாறுதல்களை அரசாங்கம் செய்வார்களா ? அல்லது பொதுமக்கள் செய்ய வேண்டுமா ? அல்லது பஞ்சாயத்து யூனியன் செய்ய வேண்டுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாவட்ட மருத்துவ அதிகாரியிடமிருந்து சில 'ப்ரபோஸல்ஸ்' வந்திருக்கின்றன. அவைகளை பஞ்சாயத்து யூனியன் பொதுமக்களிடமிருந்து 'டொனேஷன்' வாங்கிச் செய்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்து, அதைப்பற்றி ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டில் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : இந்த ஆஸ்பத்திரி மாவட்டக் கழகத்தினிடமிருந்து பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றப்பட்டதாகும். இதற்கு மருந்துகள் வாங்கிக் கொடுப்பதற்குக் கூட பஞ்சாயத்து யூனியனுக்கு ஓரளவுக்கு நிதி வசதி குறைவாக இருக்கிற காரணத்தினால், அரசாங்கமே இதை எடுத்துக்கொள்ளவேண்டும்

என்று சொல்லப்படுகிறது. மேலும், இந்த பஞ்சாயத்து யூனியன் ஜனத்தொகை 1,04,000-க்கு மேலாக இருக்கிறது. சுற்றுப் பக்கத்தில் இருபது மைல்களுக்கு மேல் எந்தவிதமான ஆஸ்பத்திரியும் இல்லை. இது தாலூகா தலைநகரமாக மாறப் போவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் கூடவே இதையும் செய்தால் நலமாக இருக்கும். ஆகவே, அரசினர் இதுபற்றி நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்து யூனியனின் கஷ்டங்களையெல்லாம் உணர்ந்துதான் அரசாங்கம் அதற்கு எந்த விதத்தில் ஆதரவு அளிக்கவேண்டும் அல்லது அந்த ஆஸ்பத்திரியை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டுமா என்பதுபற்றி 'ஆர். டி. எல். எ.' டிபார்ட்மெண்டில் பரிசீலனையில் இருக்கிறது என்று மறுபடியும் கூறிக்கொள்கிறேன்.

Amaravathi Co-operative Sugar Mills

* 465 Q.—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the reasons for taking charge of the Amaravathi Co-operative Sugar Mills, Udumalpet, by the Government?

The Hon. Sri R. VENKATARAMAN : The Amaravathi Co-operative Sugar Mills sustained heavy loss during 1962–63 crushing season because effective arrangements had not been made by the Committee of the Mill for adequate supply of cane. The Committee was, therefore, dissolved and a Special Officer appointed to reorganise the affairs of the Mill so as to enable it to crush to full capacity during the special season of 1964.

திரு. வி. எஸ். எஸ். மணி : கரும்பு கிடைப்பதற்கு என்ன வழி வகை புதிதாக செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'கேன்' ரெஜிஸ்டிரேஷன் செய்துகொண்டிருக்கிறோம். ரெஜிஸ்டிரேஷன் செய்து, அவர்கள் எந்த சமயத்திலும் கேன் வாங்குவதற்கு இப்பொழுது உத்தரவாதம் கொடுக்கிறோம்.

திரு. எம். எஸ். மணி : அரசாங்கப் பொறுப்புக்கு வருவதற்கு முன் அந்த ஆலையில் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

Sri Palani Andavar Devasthanam Colleges

* 466 Q.—Sri P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the amount invested by Sri Palani Andavar Devasthanams in starting Colleges in 1963 and the recurring expenditure therefor;

(b) the number of students who were admitted in the various classes; and

(c) the various courses of studies available in these Colleges?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Sri Palani Andavar Arts College, Palni, was started by the devasthanam on 24th June 1963.

The amounts invested are :—

(i) Rs. 1 lakh towards endowments.

(ii) About Rs. 71,600 on buildings and land.

(iii) About Rs. 54,470 on furniture, equipment and books.

As against an anticipated fee income of Rs. 50,000 the total estimated recurring expenditure is Rs. 1 lakh for 1963–64.

(b) & (c) One hundred and sixty students in the only course started, viz., P.U.C.

பஞ்சாயத்து யூனியன்களுக்கான மானியம்

* 467 கேள்வி—திரு. இரா. நாராயணன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன்களுக்கு எந்த அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது?

(இ) மிகவும் பிற்பட்ட மக்கள் வாழும் யூனியன்களுக்கு குடி தண்ணீர், புதிய ரோடு (சாலை), விவசாய அபிவிருத்தி செய்ய கடன்கள் முதலியவைகளுக்காக தனிச்சலுகைகள் அளிக்கப்படுகின்றனவா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ) சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. நாராயணன்: இந்தப் பஞ்சாயத்து யூனியன்களை கிஸ்தி வசூலைப் பொருத்து, ஏ, பி, ஸி, என்று பிரிக்கிறார்கள். ஒரு வட்டத்திலே பாசன வசதி இருந்து தண்ணீர் பாய்ச்சினால், அதிகத் தீர்வை செலுத்த வேண்டியிருக்கிறது. அதை முன்னிட்டு அந்தப் பகுதியிலே மூன்றில் ஒரு பங்கு அதிகத் தீர்வை விதிக்கிற காரணத்தால், பி-என்ற பிரிவிலே அந்தப் பஞ்சாயத்து யூனியனை அமைத்து விடுகிறார்கள். ஆனால் அதற்கேற்றவாறு கிராண்ட் கொடுப்பதில்லை. ஆகவே வட்டார வகையிலே பிரிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கெனவே நன்றாகப் பரிசீலனை செய்து, ஸ்டாண்டிங் பைனான்ஸ் கமிட்டி, அதற்கு மேலே சட்ட மன்றம், டிஸ்டிரிக்ட் கவுன்சில் தீர்மானம் செய்து. கலெக்டர்

a Printed as Appendix IV on Pages 852–859.

31st March 1964]

சிபார்சின் பேரில் கிளாஸிபிகேஷன் செய்யப்பட்டிருக்கிறது. சட்டத்தை திருத்தக்கூடிய காலத்திலே, அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

புலவர் கா. கோவிந்தன் : ஹரிஜனங்கள், பிற்பட்ட மக்கள் இருக்கக்கூடிய பகுதியிலே குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு நிதி திரட்டுவது தேவையில்லை என்று சொல்லப் படுகிறது. மேல் நிலை குடி தண்ணீர் திட்டங்களைப் பொறுத்த வரையிலும், பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான உதவியையும் எதிர்பார்க்காமல் பஞ்சாயத்துக்களே ஏற்று நடத்த முன்வருவார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மேல் நிலை குடிதண்ணீரைப் பொருத்து பூராவும் என்பதல்ல. ஹரிசன மக்கள், பிற்பட்ட மக்கள் எங்கே வாழ்கிறார்களோ, அந்தப் பகுதிகளிலே 25 சத விகிதம் காண்டிரிபியூஷன் கொடுக்க வேண்டியதில்லை.

திரு. ம. கமலநாதன் : நிலத்தீர்வையின் அடிப்படையில் ஏ, பி, ஸி-என்று வட்டாரங்களைப் பிரிக்கிறார்கள். இந்த அடிப்படையே தவறு. அதனால் அரசினர் கொடுக்கும் மானியங்களை பெற முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே இதை மறு பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா? இந்த ஸ்தல சாலைகள் மானியம் கொடுக்கும்பொழுது, மக்கள் தொகையை ஒட்டி தலைக்கு 40 ந. பை. என்ற விகிதத்தில் கொடுக்கப்படுகிறது. இதை மாற்றி அமைப்பதற்கு உத்தேசம் இருப்பதாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு மாநாட்டில் குறிப்பிட்டதாக நான் ஒரு செய்தி பார்த்தேன். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 28—3—1964-ம் தேதியில் கன்ஸல்டேடிவ் கமிட்டியிலே கனம் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு மாதத்திற்குள்ளே துரிதமாக நடவடிக்கை எடுப்பது சாத்தியமில்லை. கிளாஸிபிகேஷனைப் பொறுத்த வரையில் சட்டத்தை அமெண்டு செய்யக்கூடிய காலத்திலே, நன்றாக சர்க்கார் பரிசீலனை செய்து எல்லா பிளாக்குகளையும் சீர்திருத்தம் செய்யும்.

திரு. இரா. நாராயணன் : இதை அரசாங்கம் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வருகிற வரையிலும் பின்தங்கிய பஞ்சாயத்து யூனியனுக்கு ஸ்பெஷல் கிராண்டு அளிக்குமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி உத்தேசமில்லை.

திரு. ம. கமலநாதன் : இந்த துணை கல்வி மானியத்திலே பஞ்சாயத்து யூனியன்களுக்காக கொடுக்கப்படும் தொகை மிகமிகக் குறைவு. பள்ளிக்கூட கட்டடங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை புதிதாக சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. பழைய மாணவர்களின் எண்ணிக்கை சேர்க்கப்படுவதில்லை. ஆகவே 5 சத விகிதம் மாணவர்களுக்குத் தான் கட்டிட வசதி செய்து கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கிறோம். ரயில்வே செஸ் பண்டிலிருந்து கட்டிடங்கள் கட்டலாம்

என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். எனினும் பயன்படுத்த வில்லை என்று தெரிகிறது. ஆகவே ரயில்வே செஸ் பண்டை பஞ்சாயத்து யூனியன் சிறிய கட்டிடங்கள் கட்டுவதற்கு கட்டாயமாக பயன்படுத்திக்கொள்ளலாமென்று ஒரு உத்தரவு போடுவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி தகவல் என்னிடத்தில் இல்லை. இதற்கு தனியாகக் கேள்வி போடவேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : சாலை மானியம் கொடுக்கிற நேரத்திலே தலைக்கு 40 ந.பை. என்ற விகிதத்தில் கொடுக்கிறார்கள். சில பஞ்சாயத்து யூனியன்களின் எல்லை பரந்திருக்கிறது. ஆகவே மக்கள் தொகையை கணக்கிடாமல், ரோடுகளின் நீளத்தை மனதில் வைத்து, அதற்கேற்றவாறு மானியம் கொடுப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நீளத்தை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு மானியம் கொடுப்பது முடியாத காரியம். எல்லை பரந்திருக்கிறது என்பதற்காக ரோடுகள் போடாமல் இருப்பதில்லை. பஞ்சாயத்து யூனியன்களிலே அதிகமான ரோடுகள் போடுகிறார்கள். சர்க்கார் இதைப்பற்றி தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறது. நன்றாக சிந்தித்து ஒரு முடிவு எடுக்கப்படும்.

பரம்பிக்குளம் மின்சார திட்டம்

*468. **கேள்வி—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் மின்சாரத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது ?

(இ) இத்திட்டத்தினால் எவ்வளவு மின்சாரம் கிடைக்கும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) பரம்பிக்குளம்-ஆளியாறு நீர் மின்சாரத் திட்டத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்போது இத் திட்டத்துக்காக உத்தேசச் செலவு 10 கோடியே 22 லட்சமாகும்.

(இ) 180 மெகாவாட்.

சென்னை நகரில் டாக்சிகள்

*469 **கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் மொத்தமாக டாக்சிகள் ஓட்டும் லைசென்ஸ் எத்தனை கம்பெனிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அந்தக் கம்பெனிகளில் ஆனமலை பஸ் டிரான்ஸ்போர்ட் கம்பெனியும் ஒன்றா ?

(உ) அதற்கு சர்க்கார் கோட்டாவிலிருந்து ஐந்து அம்பாசிடர் கார்கள் ஒதுக்கப்பட்டது உண்மையா ?

31st March 1964]

(எ) அதை அந்தக் கம்பெனி பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பது உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Nine companies.

(b) Yes.

(c) Yes.

(d) No. The vehicles are plying from September 1963.

திரு. மு. கருணாநிதி : இந்த டாக்சிகளுக்கு லைசென்ஸ் கொடுக்கிற வகையில், ஒரு கம்பெனிக்கு அதிகபட்சம் எத்தனை டாக்சிகளுக்கு லைசன்ஸ் வழங்கப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது நாம் வகுத்திருக்கிற கொள்கைப்படி எத்தனை கேட்டாலும் கொடுக்கிறோம்.

திரு. ஆ. துரையரசன் : இந்த தனியார் துறையில் ஓடுகின்ற டாக்சிகளை படிப்படியாகக் குறைத்துவிட்டு, கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற டாக்சிகளை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தமாதிரி எண்ணம் இல்லை. கூட்டுறவுத்துறையில் அதிகமாக வந்தால், அவர்களுக்கும் வசதி அளிக்கவேண்டும் என்பதுதான் உத்தேசம்.

கோபாலபுரத்தில் காளைமாடு வதை

***.470 கேள்வி—திரு. செ. சீனிவாசன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அரசியல் பிரச்சாரமாக சென்னை, கோபாலபுரத்தில் காளை மாட்டைக் கொம்பால் குத்தினார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இக்குற்றம் செய்தவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

செகரடேரியட் அதிகாரி தற்காலிக நீக்கம்

***471 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க செகரடேரியட் அலுவலகத்தில் உயர்தர அதிகாரி எவரேனும் வேலையினின்று நீக்கிவைக்கப் பட்டுள்ளனரா ?

(இ) ஆமெனில், அதற்குக் காரணமென்ன ?

(உ) அரசாங்கம் அவர்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Yes. An Assistant Secretary to Government has been placed under suspension since 3rd December 1963, for certain serious irregularities committed in a file.

(c) Orders have been issued reducing him to the post of Superintendent for a period of two years with effect from the date of suspension, i.e., 3rd December 1963 afternoon.

திரு. து. ப. அழகமுத்து: என்ன தவறு செய்தார் என்பதற்காக அவர் சஸ்பெண்டு செய்யப்பட்டார் என்பதை அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சில பைல்களிலே போகஸ் எண்டிரிகள் போட்டார் என்பதுதான். தவறுதலாக, இல்லாததை அவர் எழுதிவைத்தார் என்பதுதான் குற்றச்சாட்டு.

Unemployment problem

* 472 Q.—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to solve the problem of unemployment in the State; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The attention of the Honourable Member is invited to the note "on steps to solve the unemployment problem during the Third Plan Period" already placed on the Table of the House on 31st October 1962.

Drinking water to Madras

* 473 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state the details of the proposals under consideration for augmenting the supply of drinking water for Madras City?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சென்னை நகரத் தண்ணீர் சப்ளையை அதிகரிக்கும்பொருட்டு, அடியிற்கண்ட திட்டங்களை நிறைவேற்ற அரசினர் முடிவு செய்துள்ளனர் :—

(அ) பூண்டியிலிருந்து புழலேரிக்கு, திறந்த கால்வாய்த் திட்டம்.

(இ) புழலேரி, சோழவரம் ஏரி இவற்றின்கிழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களை ஆர்ஜிதம் செய்தல். அப்போதுதான், அந்த ஏரிகளின் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவது நின்று, அவற்றின் தண்ணீர் முழுவதும் சென்னை நகர சப்ளைக்குக் கிடைக்கும்.

2. அடியிற்கண்ட திட்டங்களையும் அரசாங்கம் யோசித்து வருகிறது :—

(1) காவேரி, கிருஷ்ணா நதிகளிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து, சென்னை நகரத்தின் தண்ணீர் சப்ளையை அதிகரித்தல்.

31st March 1964]

(2) புழலேரி, பூண்டி, சோழவரம் ஏரிகளின் முழு ஏரி மட்டத்தை உயர்த்துதல்.

(3) ஊற்று நீர்ப் பரிசீலனை.

(4) கடல்நீரைக் குடிநீராக மாற்றுதல்.

திரு. வை. சங்கரன் : கடல் நீரை குடி நீராக மாற்றுவது சிக்கனமாக இருக்காது, அதற்கு ஓரளவு அதிகப்படியான பணம் செலவாகும் என்று அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன். 9.00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சார், இது சம்பந்தமான பரிசீலனையெல்லாம் நடந்து கொண்டு இருக்கிறது, அதற்குள் எந்தவிதமான திட்டவட்டமான தகவலும் கொடுக்க இயலாது.

திரு. அ. ராகவ ரெட்டி : சார், புழலேரி, சோழவரம் ஏரி இவற்றின் கீழ் உள்ள ஆயக்கட்டுகளை ஆர்ஜிதம் செய்யும் வேலை எந்த நிலையில் இருக்கிறது? அது நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்களே, அது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுது ஃபர்ஸ்ட் ஸ்டேஜ் நடந்து கொண்டிருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அக்விஸிஷன் ப்ரொசீடிங்ஸ் நடந்து கொண்டிருக்கிறது.

ஆலங்குடி-ஆதனக்கோட்டை யூனியன் சாலை

*** 474 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடியிலிருந்து ஆதனக்கோட்டை செல்லும் யூனியன் ரோடு நீண்ட நாட்களாக பழுது பார்க்கப்படாமல் இருப்பது அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

(இ) ஆமெனில், அதனைச் செப்பனிட சம்பந்தப்பட்ட யூனியன்களுக்கு உத்தரவு எப்போது பிறப்பிக்கப்படும்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) 1963-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்த சாலையின் செப்பனிடும் வேலை முடிவுற்றது.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, இந்த சாலையில் அதிகமான பஸ் போக்குவரத்து இருப்பதால், அங்கே இன்னும் மண் ரோடாகவே இருக்கிற காரணத்தினால், பிரயாணம் செய்யும் பிரயாணிகள் அந்த சாலையில் போகும் போது ஆடைகள் சிவப்பு நிறமாக மாறிவிடுகிறது. ஆகவே அந்தச் சாலையை நல்ல முறையில் செப்பனிட உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது ஏற்கனவே சர்க்காருடைய கவனத்தில் இருந்து வருகிறது.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்கள் ரோடுகள் போடுவதில் காலதாமதங்கள் ஏற்படுகின்றன. உணவு உற்பத்தியை அதிகப் படுத்தவேண்டும் என்று சொல்லும் இந்த காலத்தில், விவசாயிகள் சிரமப் படுகிறார்கள். ஆகவே, ஒரு கல் தொலைவுக்கு அப்பால் சர்க்காரே நெடுஞ்சாலை திட்டத்தில் எடுத்துக் கொள்ள உத்தரவு போடுவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வருஷா வருஷம் ஓரளவு குறிப்பிட்ட நீளத்தை பஞ்சாயத்திலிருந்து அப்படி எடுத்துக் கொள்கிறோம். அப்படி இது வரை 3,800 மைல் நீளமுள்ள ரோடுகள் சர்க்காரால் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

* 475 **கேள்வி—திரு. இரா. நாராயணன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், செந்துறை யூனியன் பகுதியில் உள்ள நல்லான்பாளையம் கிராமத்தில் அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றைத் துவக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. இரா. நாராயணன் : தலைவர் அவர்களே, நல்லான்பாளையம் கிராமத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்காக சொந்தக்காரர்களிடம் இருந்து நிலம் வாங்கப்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி தகவல் இல்லை. ஆனால் இப்பொழுது அந்தப் பயிற்சிப்பள்ளிக்கு அங்கு தேவையில்லை என்பது அரசாங்கத்தின் கருத்து.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, பொதுவாக திருநெல்வேலியில் தனியார் ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் நடத்துவதனால் ஏராளமாக பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாத நிலையில் இருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் இடம் கொடுக்கலாம் என்றாலும், மாணவர்கள் கிடைக்காத நிலை இருக்கிறது. அதை மாற்றும் வகையில் மிகவும் பின்தங்கிய சேலம் மாவட்டத்தில் ஒரு ஆசிரியர் பயிற்சி பள்ளி ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒவ்வொரு மாவட்டத்தின் தேவையையும் ஆராய்ந்து தேவைக்குத் தக்கவாறு புதிய பயிற்சிப் பள்ளிகள் அனுமதிக்கப்படுகின்றன.

31st March 1964]

மணிலா தீவிர சாகுபடி.

* 476 கேள்வி—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

விருத்தாசலம், கள்ளக்குறிச்சி தாலுக்காக்களில் மணிலா தீவிர சாகுபடி முறையை விஸ்தரிக்கும் உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN : There is no proposal to extend the Package Scheme immediately to Virdhachalam and Kallakurichi taluks of South Arcot district. An impact programme has been sanctioned in March 1963 for millets, groundnut and cotton. But the areas covered by this programme under groundnut in South Arcot district are only Villupuram, Cuddalore and Tirukoilur taluks. It is, however, proposed to start 15 package units during the Fourth Five-Year Plan period and if these are sanctioned, the package scheme may be implemented in the taluks of Vridhachalam and Kallakurichi.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விருத்தாசலம், கள்ளக்குறிச்சி தாலுகாக்களுக்கு பாக்கேஜ் திட்டத்தை உடனடியாக விஸ்தரிக்கத் திட்டம் எதும் இல்லை. 1963 மார்ச் மாதத்தில் கம்பு, சோளம் போன்ற தானியங்கள், வேர்கடலை பருத்தி இவை சம்பந்தமாகத் தீவிர திட்டம் Impact programme ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனல் இத் திட்டத்தின்படி வேர்க் கடலை உற்பத்தியின்கீழ், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள விழுப்புரம், கடலூர், திருக்கோயிலூர் தாலுக்காக்கள் மட்டுமே அடங்கும். என்றாலும், நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 15 பாக்கேஜ் யூனிட்டுகளை ஆரம்பிக்க உத்தேசிக்கிறோம். இந்த யூனிட்டுகள் அனுமதிக்கப்பட்டால், விருத்தாசலம், கள்ளக் குறிச்சி தாலுகாக்களில் பாக்கேஜ் திட்டம் அமலுக்கு வரும்.

Glossary of legal terms

* 477 *Q.*—SRI M. KALYANASUNDARAM AND SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a glossary of legal terms in Tamil has been prepared;

(*b*) whether it is a fact that the All-India terms of the Central Official Language Commission are to be adopted as they are; and

(*c*) whether the translation of Central Acts into Tamil is to be done at State-level or by the Central Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Not yet.

(*b*) The Government have decided that after the glossary prepared by the Government of India Commission becomes available. necessary modifications of the Tamil Legal Glossary prepared in this State might be made, so that it might be in line with the

Commission's glossary. If for any technical and legal term there is no suitable Tamil equivalent in use, the equivalent given in the standard glossary shall be transliterated in Tamil. In cases where there is a suitable Tamil equivalent in use, the transliterated standard term might be shown within brackets, for the information of those persons who might be handling the statutes, rules, etc., in both Tamil and Hindi or other Indian languages.

(*c*) The matter is under consideration.

மாணவர் விடுதிகள், திருச்சி மாவட்டம்

** 478. கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

1964-65-ம் ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் அரசினர் மாணவர் விடுதிகள் கட்டுவதாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : There are no proposals for construction of hostels in Tiruchirappalli district during 1964–65. The question of constructing a building for the Government Korava Boarding Home at Pudukkottai during 1964–65 is, however, under the consideration of the Government.

திருச்சி மாவட்டத்தில் 1964-65-ல் மாணவர் விடுதிகள் கட்டும் எண்ணம் இல்லை. ஆயினும் புதுக்கோட்டையில் 1964-65-ல் அரசினர் குறவர்கள் உணவு விடுதிக்காகக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவது குறித்து அரசாங்கம் யோசித்து வருகிறது.

திரு. பி. முருகையன் : *தலைவர் அவர்களே, புதுக்கோட்டை, ஆலங்குடி அரசினர் மாணவர் விடுதிகளில் இடநெருக்கடியால் வியாதி வந்து மாணவர்கள் விடுதிகளை விட்டு நாளுக்கு நாள் வெளியேறுகிறார்கள் என்பதனால், அதைக் கவனித்து ஆவன செய்ய சர்க்கார் முன்வருமா ?*

கனம் திரு. பூ. கக்கன் : *மாணவர்கள் ஹாஸ்டலை விட்டு நாளுக்கு நாள் வெளியே போக மாட்டார்கள். திருச்சியில் குறவர் விடுதிக்காக கட்டடம் கட்ட இருப்பதால், அது ஆலங்குடி, புதுக்கோட்டை மாணவர்களுக்கும் வசதியாக இருக்கும்.*

திரு. பி. முருகையன் : *தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள், மாணவர்கள் வெளியேறவில்லை என்று சொல்லுகிறார்கள். நான் இந்த புகாரை புதுக்கோட்டையிலும் ஆலங்குடியிலும் வியாதியால் பீடிக்கப்பட்டு வெளியேறுகிறார்கள் என்பதைப் பார்க்கிறேன். ஆகவே அதில் பிரத்தியேகக் கவனம் செலுத்த சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?*

கனம் திரு. பூ. கக்கன் : *சபாநாயகர் அவர்களே அது மாதிரி கலெக்டரிடமிருந்தோ, அரிஜன நல இலாகா அதிகாரியிடமிருந்தோ அப்படி ஒரு தகவலும் இல்லை. கனம் அங்கத்தினர் அதுபற்றி எழுதி அனுப்பினால் நான் கவனிக்க முடியும்.*

31st March 1964]

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, அரந்தாங்கி வட்டம் மணமேல்குடியில் ஒரு ஹாஸ்டல் வேண்டும் என்று மாவட்ட குழுவில் தீர்மானம்கூட நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அங்கே மாணவருக்கு ஒரு இல்லம் அமைக்க ஏற்பாடு செய்யப் படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : மாணவர் விடுதி வேண்டும் என்று கனம் அங்கத்தினர் குறிப்பிடும் இடம் பற்றி எந்தவிதமானத் தகவலும் என்னிடம் இல்லை.

திரு. வை. சங்கரன் : மாநிலத்தில் வேறு எந்த இடத்திலாவது மாணவர்கள் விடுதி கட்ட சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : திருவாடானை யில் ஒரு மாணவர் விடுதி கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், எமர்ஜன்ஸி காரண மாக அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார் கள். வரப்போகிற கல்வி ஆண்டிலாவது அதை ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : எமர்ஜன்ஸி போன பிற்பாடு அதைப் பற்றி யோசிக்கப்படும்.

திரு. இரா. நாராயணன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 'இந்த ஆண்டிலே மாணவர்கள் விடுதி கட்ட முடியாது' என்று சொன்னார்கள். இருந்தாலும், திருச்சி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில், சில இடங் களில் மாணவர்கள் விடுதிகள் கட்டப்படவேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அதற்கு இனிமேலாவது அரசாங்கம் ஆவன செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : வருங்காலத்தில், அரசாங்கத்தின் நிதி நிலைக்குத் தக்கவாறு எந்த எந்த இடங்களில் எந்த ஹாஸ்டலைக் கட்டுவது நல்லது என்பதைப் பின்னால் யோசிக்கலாம். இப்போதே ஒன்றும் சொல்வதற்கில்லை.

எண்ணெய் சுத்தகரிப்பு ஆலை

* 479 கேள்வி—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :**
திரு. கே. மதியழகன் : } கனம்

கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

(இ) இத் திட்டத்திற்காக மத்திய சர்க்காரும் மாநில சர்க் காரும் ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

[31st March 1964

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) The Government of India have appointed a committee to investigate and recommend a site for the location of an oil refinery in Madras State.

(இ) The Madras Government have not allocated any funds for this scheme. It is not known how much money has been allocated by the Government of India.

திரு. வை. சங்கரன் : இந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை எந்த இடத்தில் அமைக்க வேண்டும் என்பதைப்பற்றி ஏற்கனவே தீர்மாணிக்கப்பட்டுவிட்டது. கொஞ்ச காலத்திற்கு முன்பு தூத்துக்குடியில் இதை அமைப்பதாக இருந்தது. அதிலே ஏதாவது மாற்றம் இப்பொழுது இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதெல்லாம் ஸெலக்ஷன் கமிட்டி தீர்மானம் செய்யும்.

Special Sub-jail at Tiruchirappalli

* 480 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Information be pleased to state—

(*a*) the present stage of the proposal to shift the special sub-jail at Tiruchirappalli Town to the compound of the Central Jail: and

(*b*) whether a final decision has been taken on the proposal to utilise the site after shifting the sub-jail, for locating a market?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இத் திட்டம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

(இ) இல்லை.

Central bus-stand, Tiruchirappalli

* 481 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the present stage of the proposal to construct a Central bus-stand at Tiruchirappalli Town?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : திருச்சிராப்பள்ளி நகராட்சியினரால் மத்திய பஸ் ஸ்டாண்ட் கட்டுவதற்காக இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் ரயில்வே இலாகாவினுடையதாகையால் மேற்கூறிய வேலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ரயில்வே இலாகாவிற்கு மேற்கூறிய இடத்திற்கு ஈடாகக் கொடுக்கக்கூடிய வேறு நிலம் ஏதாவது இருக்கின்றதா என்பது பற்றி மாவட்ட அதிகாரி ஆராய்ந்து வருகிறார்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திருச்சிராப்பள்ளி மத்திய பஸ் நிலையம் அமைப்பது சம்பந்தமான விஷயம் மிக நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கிறது. இதில் நகரசபை ஒரு முடிவுக்கு வரும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அவர்களுக்குள் பல அபிப்பிராய பேதம் இருக்கிறது.

ஆகவே, சர்க்காரே தலையிட்டு, மத்திய பஸ் நிலையம் அமைப்பது சம்பந்தமாக நகரசபைக்கு சிபார்சு செய்யுமா? அல்லது வற்புறுத்துமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சர்க்கார் தலையிடுவதானாலும் மெட்ராஸ் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடி சட்டத்தின் கீழேதான் செய்ய முடியும். இது பல காலமாகத் தாமதமாகி வருவது சர்க்காருக்கும் தெரியும். கலெக்டரும் உறுதியாக இதில் துரிதமான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். குறிப்பிட்ட நிலம் ரயில்வே இலாகாவினருக்கும் பாதுகாப்பு இலாகாவினருக்கும் சேர்ந்த நிலமாக இருக்கிறது. மாற்று நிலம் கொடுக்க ஏதாவது வழி இருக்கிறதா என்பதில் கலெக்டர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். சீக்கிரமாக நடக்கும் என்று நினைக்கிறேன்.

Combating cf corruption

* 482 *Q*.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have examined the recommendations of the Santhanam Committee set up by the Government of India to enquire and suggest remedies for combating corruption?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, and as a first step this Government have decided to constitute a Directorate of Vigilance and Anti-Corruption headed by a Director of the grade of an Additional Inspector-General of Police, and to merge the present 'X' Branch, C.I.D. with this Directorate. Orders have been issued accordingly.

Examiners for Shorthand and Typewriting Examinations

*483 *Q*.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the details regarding the appointment of Examiners for the Shorthand and Typewriting Examinations conducted by the Commissioner for the Government Examinations; and

(*b*) the authority who is empowered to make these appointments?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Details regarding the appointment of Examiners for the Shorthand and Typewriting Examinations conducted by the Commissioner for Government Examinations cannot be disclosed in the public interest.

(*b*) The Commissioner for Government Examinations, Madras, is empowered to make the appointment of Examiners.

Hospital for Children, Madurai City

* 484 *Q*.—SRI K. CHEEMAICHAMY: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to open a separate hospital for children in the City of Madurai; and

(*b*) if so, when?

[31st March 1964

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : குழந்தைகளுக்குத் திடீரென்று ஏதாவது ஸர்ஜிகல் ஆபரேஷன் செய்ய வேண்டியிருந்தாலும், வேறு ஆபரேஷன் செய்ய வேண்டியிருந்தாலும் அதற்காக பெடியாட்ரிக்ஸ் ஸர்ஜரி யூனிட் ஒன்று தனியாக ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. தற்போது ஒரே ஒரு டாக்டர்தான் இதற்கென்று இருக்கிறார். அவருக்குப் போதுமான அஸிஸ்டெண்ட்கள் கிடையாது. அதனால் பாதகம் ஏற்படுகிறது. போதுமான இடம் இருப்பதால், தனியாக பெடியாட்ரிக்ஸ் ஸர்ஜரி யூனிட் ஒன்றைச் சீக்கிரத்தில் ஆரம்பிக்க சர்க்கார் உத்தேசிக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிப்பட்ட முறையில் பெடியாட்ரிக்ஸ் ஸர்ஜிகல் யூனிட் ஆரம்பிக்க இயலாது. ஏற்கெனவே இருக்கும் ஸர்ஜிகல் வார்டில் குழந்தைகளுக்காக வேண்டிய இரண்டு, மூன்று படுக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எந்த ஆபரேஷனாக இருந்தாலும் ஜெனரல் ஸர்ஜிகல் தியேட்டரில்தான் செய்ய முடியும், தனிப்பட்ட முறையில் குழந்தைகளுக்கு என்று ஒரு யூனிட் வைக்க முடியாது.

All-India Educational Service

* 485 *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have agreed to the formation of an All-India Educational Service;

(*b*) if so, the particulars thereof; and

(*c*) if not, the reasons for not agreeing to the formation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) This Government have agreed to the introduction of an All-India Educational Service provided it is restricted up to the grade of Joint Director of Public Instruction. Details will be settled later.

(*c*) Does not arise.

Establishment of new Universities

* 486 *Q.*—SRI M. KALYANASUNDARAM and SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the details of the proposals made to the University Grants Commission for the establishment of new Universities in Madras State; and

(*b*) when a final decision would be taken in the matter?

31st March 1964]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The Government addressed the University Grants Commission for details about the Commission's pattern of assistance for the establishment of new Universities and the quantum of aid that could be expected for the proposed University at Madurai.

(*b*) A final decision will be taken after the report of the Expert Committee constituted by the Government is received.

Appointment of Tamil graduates as Pandits

* 487 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the graduates who took Tamil as their Optional subject in their Degree course are appointed as Tamil Pandits in the High Schools; and

(*b*) whether they are treated on a par with other Graduates in regard to salary, service conditions and hours of work?

THE HON. SRI M. BHAKTAVATVALAM: (*a*) Yes, provided that they have secured a degree in teaching and are appointed to Grade I posts.

(*b*) Yes.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியில் இத்தகைய தமிழாசிரியர்களுக்குத் தலைமை ஆசிரியர்கள் **பதவி** கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கிரேடு-1 பதவி என்றால் **அது** தான் தலைமை ஆசிரியர் பதவி.

புதிய உயர்நிலைப் பள்ளிகள்

* 488 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா :

திரு. எம். வி. கரிவேங்கடம் : } கனம் முதல் அமைச்சர்

தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ல் தமிழ்நாட்டில் எத்தனை புதிய உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: One hundred and ninety new High schools were permitted during 1963–64.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே நடப்பு ஆண்டில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் திறக்க உத்தேசம் இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வருகிற மனுக்கள், எந்த எந்த இடங்களில் அமைக்கப்படவேண்டும் என்கிற நிலை, இவற்றை யெல்லாம் பொறுத்த விஷயம் இது.

திரு. கரு. சீமைச்சாமி : புதிதாகத் திறக்கப்படுகிற உயர்நிலைப் பள்ளிகளுக்கு விளையாட்டு மைதானங்கள் இல்லை. பள்ளிகளைத் திறக்கவேண்டும் என்ற ஆர்வத்தினாலே அவ்வாறு திறக்கப்

படுகின்றன. விளையாட்டு மைதானங்களுக்கு இடம் ஒதுக்கப்படுவதோடு, ஃபிஸிகல் ட்ரெயினிங் இன்ஸ்ட்ரக்டர்களும் நியமிக்கப்படவேண்டியது அவசியம். ஆகவே, இனிமேல் திறக்கப்பட இருக்கிற பள்ளிகளைப் பொறுத்தாவது, இவை வற்புறுத்தப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முக்கியமாக கிராமப் புறங்களில் தான் உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டு வருகின்றன. அங்கே விளையாட்டு மைதானங்கள் கிடைக்கக் கஷ்டம் இருக்காது. பள்ளிகள் திறக்கப்படவேண்டும் என்று விரும்புகிறவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். கனம் சட்ட மன்ற உறுப்பினரைப் போன்றவர்களும் அக்கறை கொள்ளவேண்டும். விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் கருத்து.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கியிருக்கும் சேலம் மாவட்டத்தில் எந்தவிதமான கண்டிஷன்களும் இல்லாமல் அதிகமான உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்படுமா ? அதற்கேற்றவாறு அங்கிருக்கும் கண்டிஷன்கள் தளர்த்தப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாவட்டக் கழகம் பணியாற்றிக் கொண்டு வந்தபோதே அதிகமான உயர்நிலைப்பள்ளிகள் சேலம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டன. இப்போதும் அமைக்கப்பட்டு வருகின்றன. எவ்விதக் கண்டிஷனும் இல்லாமல் அமைக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. மக்கள் விழிப்புடன் முன் வருகிறார்கள். அதை மேலும் திரட்டுவது கனம் உறுப்பினருடைய பொறுப்பாக இருக்கவேண்டும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, ஹோசூர் மத்தகிரியில் பொது மக்களில் ஐயாயிரம் ரூபாய் கட்டக்கூடிய வசதி படைத்தவர்கள் யாரும் இல்லை. அங்கே வேலை செய்யக்கூடியவர்கள் பெரும்பாலும் என்.ஜி.ஓ.-க்கள்தான். ஆகவே, அரசினரே ஒரு உயர்நிலைப் பள்ளியை அங்கே திறக்க முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மிகவும் பிற்போக்கான பிராந்தியமாக இருந்தால், அங்கே அரசினரே முன்வந்து உயர்நிலைப்பள்ளியை அமைத்துக் கொண்டுதான் வருகிறார்கள். கனம் உறுப்பினர் குறிப்பிடுகிற இடத்தைப் பொறுத்தமட்டில், அரசாங்கம் பரிசீலனை செய்து, அவசியமா என்பதை ஆராய்ந்து அதற்குப் பிறகு முடிவு செய்யும்.

திரு. மு. கருணாநிதி : ஒரு உயர்நிலைப் பள்ளியைத் துவக்க இத்தனை மாணவர்கள் எண்ணிக்கை இருக்கவேண்டுமென்று கணக்கு இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறைந்தபட்சம் மாணவர்கள் எண்ணிக்கை இவ்வளவு இருக்க வேண்டுமென்று இருக்கிறது. எவ்வளவு என்ற விவரம் இல்லை.

31st March 1964]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஒரு இடத்தில் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னால் யார் உயர்நிலைப் பள்ளிவேண்டுமென்று கேட்கிறார்களோ அவர்களே நிலத்தை வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். வசதி இல்லாத இடங்களில் அதாவது, பஞ்சாயத்துக்களில் நிலம் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே பள்ளிவேண்டுமென்கின்றவர்களே நிலத்தை வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்காமல் இருப்பார்களா? அதற்குப் பதிலாக சர்க்காரே மேற்படி இடத்திற்கு வேண்டிய நிலத்தை வாங்கிக் கொடுக்க முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமென்றால் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்கிறது. ஆனால் 10,000 ரூபாய் டெபாசிட் கட்டவேண்டும். முதல் ஆண்டு 5,000 இரண்டாவது ஆண்டு 3,000 மூன்றாவது ஆண்டு 2,000 என்று கட்டவேண்டும். பள்ளிக் கட்டிடம் கட்ட மக்கள் முன் வர வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய பஸ் மார்க்கங்கள்

* 489 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம் 1962-63-ல் புதிய பஸ் ரூட்டுகளில் பஸ் விடும்படி தீர்மானம் செய்து சர்க்காருக்கு அனுப்பியுள்ளதா ?

(இ) அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. முருகையன் : சபையின் முன் வைக்கப்பட்ட அறிக்கையில் நாகப்பட்டினம், புதுக்கோட்டை வழியாக இராமநாதபுரத்திற்கு ஒரு பஸ் விடப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த பஸ் எப்போது முதல் விடப்படும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

சின்னசாமியின் தற்கொலை

* 490 **கேள்வி.—திரு. வி. எஸ். எஸ். மணி :**
திரு. எஸ். ஆறுமுகம் :
திரு. செ. மாதவன் :
திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : } கனம் முதல்

[a] 860–863-ம் பக்கங்களில் ஐந்தாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[31st March 1964

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 25—1—1964-ல் திருச்சியில் ரெயில் நிலையத்திற்கு எதிரே உள்ள ரோட்டில் சின்னச்சாமி என்ற வாலிபர் இந்தி திணிப்பைக் கண்டித்து தன் உடலில் பெட்ரோலை ஊற்றி தீ வைத்து "இந்தி ஒழிக" என்று கோஷமிட்டு உயிர்த்தியாகம் செய்தது உண்மையா ?

(இ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) It is a fact that he committed suicide by pouring petrol on his body and setting it on fire. It is not known whether he shouted any anti-Hindi slogan at that time.

(b) Attempts were made to provide medical assistance by rushing him to the hospital. But they were of no avail. The body was handed over to the relatives for cremation after the post-mortem examination.

திரு. வி. எஸ். எஸ். மணி : இந்த அரசாங்கம் தாய் மொழியைக் காக்கத் தவறிய காரணத்தால் மாபெரும் தியாகி சின்னசாமி வரலாற்றின் வீரச் செயலாக உயிர்த் தியாகம் செய்யும்படியாகத் தூண்டிவிட்ட குற்றம் அரசாங்கத்துடையது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

MR. SPEAKER : The question itself is insinuating.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கக் கொள்கைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. தி.மு.க. தொண்டர்களுடைய பேச்சால் தான் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. இந்தக் கன வானைப் பொறுத்தமட்டில் பற்றி எரிந்து கொண்டிருந்தபோது சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் பார்த்துக்கொண்டு போயிருக் கிறார். இதை அரசாங்கம் தூண்டி விட்டது என்று சொல்வதில் பொருள் இல்லை.

திரு. மு. கருணாநிதி : சின்னசாமி பற்றி எரிந்து கொண்டிருக் கும்போது தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர் பேசாமல் போய்க் கொண்டிருந்தார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, தி.மு.க. இந்தச் செயலைத் தூண்டிவிட்டது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்ன வாதம் பொருந்தாது அல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தி.மு.க. பேச்சால் தூண்டப் பட்டார் என்று சொன்னேன். தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர் அப்போது அந்த வழியாகப் போகும்போது யார் பற்றி எரிகிறார் கள் என்று தெரிந்துகொள்ளவேண்டும் என்றுகூட இல்லாமல் போயிருக்கிறார்.

31st March 1964]

திரு. மு. கருணாநிதி : சின்னசாமியைப்பற்றிய இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இந்தச் செயலைத் தி.மு.க. ஆதரிக்கவில்லை என்று அறிக்கை விட்டதையும், கூட்டங்களில் எடுத்துப் பேசியதையும், இந்தச் செயலை ஆதரிக்கவில்லையாயினும் தியாகத்தைப்பற்றி எடுத்துக் கூறியிருப்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைக் கனம் எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டியதில்லை. அதை அவர்கள் ஆதரிப்பதாக இருந்தால் இன்னும் பலபேர் தங்களை எரித்துக்கொள்வதற்கு முன்வந்திருக்கவேண்டும். யாரும் வராததிலிருந்தே இது தெரிகிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : சின்னசாமி அவர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது ஒரு ஆறுதல் சொல்லியிருந்தால்கூட இந்த நிகழ்ச்சியைத் தவிர்த்திருக்கலாமல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யார் சின்னசாமி என்பது எனக்குத் தெரியாது. ரயில்வே ஸ்டேஷனில் ஒருவர் 'தமிழைக் காப்பாற்றுங்கள்' என்று என்னிடம் சொன்னார். 'சரி' என்று சொன்னேன் ; 'மாட்டேன்' என்று சொல்லவில்லை.

UNSTARRED QUESTIONS.

Tuticorin Harbour Project

126 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி வேலைகளில் இது வரை நடந்துள்ள வேலைகளின் விவரமென்ன?

(இ) வேலைகள் திட்டமிட்டபடி நடந்து வருகின்றனவா?

(உ) பூர்த்தி அடைய எவ்வளவு காலமாகும்?

A.—The information available with the Government is as follows :—

(a) *Details of the works so far done in the* **context of** *the Tuticorin Harbour Project*—

(i) The construction work on the four lane express highway from mile 28/1 of the Tuticorin-Palayamkottai Road to Harbour point and the construction road from mile 4/6 of Tuticorin-Tiruchendur Road to Harbour point in two reaches is proceeding according to schedule.

(ii) One-third of the earthwork for the railway access to the Harbour point from Milavittan station has been completed. Out of the 32 bridges to be executed, seven have been completed. Work is also proceeding satisfactorily on the major bridge across the Karampallam tank surplus course.

(iii) Quarries in and around Thattapparai and Ambasamudram have been fixed. Tenders have been called. Approach roads to Quarry sites are also nearing completion.

[31st March 1964

(iv) Work on the Field offices, store sheds, canteens and temporary quarters are in an advanced stage of execution.

(v) An underground reservoir of one lakh gallons capacity and an overhead tank of 50,000 gallons capacity have been completed.

(vi) Tenders for quarters for staff have been called for and arrangements have been made to start the work.

(*b*) **Yes.**

(*c*) The Project is expected to be completed by December 1969.

எங்களுக்குக் கிடைத்துள்ள தகவல் பின்வருமாறு:—

(அ) தூத்துக்குடி துறைமுகத் திட்டம் சம்பந்தமாக இது வரை நிறைவேறியுள்ள வேலைகளின் விவரம்:—

(1) தூத்துக்குடி-பாளையங்கோட்டை சாலையின் 28/1 மைலிலிருந்து துறைமுகம் உள்ள இடத்திற்கு நான்கு வழி எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை கட்டும் வேலையும், தூத்துக்குடி–திருச்செந்தூர் சாலையின் 4/6 மைலிலிருந்து துறைமுகம் உள்ள இடத்திற்கு இரண்டு பகுதிகளாகச் சாலைபோடும் வேலையும் திட்டமிட்டபடி நடந்தேறி வருகின்றன.

(2) மீளவிடான் ரயிலடியிலிருந்து துறைமுகத்திற்கு ரயில் இணைப்பு கொடுப்பதற்காக மண் தோண்டும் வேலையில் 1/3 பகுதி முடிந்து விட்டது. இதில் கட்ட வேண்டிய 32 பாலங்களில் 7 பாலங்கள் கட்டிப் பூர்த்தியாகிவிட்டன. கோரம்பள்ளம் ஏரி உபரி வாய்க்காலுக்குக் குறுக்கே கட்ட வேண்டிய பெரிய பால வேலையும் திருப்திகரமாக நடந்து வருகிறது.

(3) தட்டப்பாறை, அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களைச் சுற்றிலும் கல்வெட்ட வேண்டிய இடங்கள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன. டெண்டர்கள் அனுப்பும்படிக் கேட்கப்பட்டுள்ளது. கல் வெட்டும் இடங்களை இணைக்கும் சாலைகள்போடும் வேலையும் முடிவடைந்து வருகிறது.

(4) துறைமுகம் கட்டுமிடத்தில் அலுவலகங்கள், பண்டகச் சாலைகள், சிற்றுண்டிச்சாலைகள், தற்காலிகக் குடியிருப்புகள் ஆகிய வற்றைக் கட்டும் வேலையும் பெரும்பாலும் முடிந்துவிட்டது.

(5) ஒரு லட்சம் காலன் கொள்திறன் கொண்ட பாதாள நீர்த்தேக்கம் ஒன்றும் 50,000 காலன் கொள்திறன் கொண்ட மேல் மட்ட நீர்த்தொட்டி ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(6) பணியாளர்க் குடியிருப்புக்களுக்கான டெண்டர்கள் அனுப்பும்படிக் கேட்கப்பட்டுள்ளன. வேலையைத் துவக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(இ) ஆம்.

(உ) 1969 டிசம்பர் மாதத்திற்குள் இத்திட்டம் பூர்த்தியாகு மென எதிர்பார்க்கப்படுகிறது.

31st March 1964]

Production of paddy

127 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total quantity of paddy produced in the State during the years 1961–62 and 1962–63; and

(*b*) the steps taken to improve the production of paddy?

A.—(*a*) The estimates for production of paddy in Madras State for 1961–62 and 1962–63 have not been finalised.

(*b*) Almost all the plan schemes for agricultural production in the State are mainly intended to improve the production of paddy, e.g., major and medium irrigation projects, minor irrigation schemes, supply schemes in respect of seeds, chemical and organic fertilisers, implements, plant protection equipment and chemicals, cash credit through Government departments and co-operatives and schemes for education of ryots in improved practices.

(அ) 1961–62, 1962–63-ம் ஆண்டுகளில் தமிழ் நாட்டில் நெல் உற்பத்தி மதிப்பீடுகள் இன்னும் முடிவாகத் தயாரிக்கப்படவில்லை.

(இ) இம் மாநிலத்தில் வேளாண்மை உற்பத்திக்கான திட்ட வேலைகள் அனைத்தும் முக்கியமாக நெல் உற்பத்திப் பெருக்கத்தைக் கருதியே உருவாக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்ட வேலைகளாவன: பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள், சிறிய பாசனத் திட்டங்கள், விதைகள், ரசாயன உரங்கள், குழிவளம், தழை உரம் போன்ற எரு வகைகள், வேளாண்மைக் கருவிகள், பயிர் பாதுகாப்புச் சாதனங்கள், ரசாயனப் பொருள்கள்—இவற்றை வழங்கும் திட்டங்கள் அரசாங்கத் துறைகள் மூலமும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் ரொக்கக் கடன் உதவியளிக்கும் திட்டம், திருந்திய சாகுபடி முறைகளைக் குடியானவர்கட்குப் போதிக்கும் திட்டங்கள் என்பன.

Travelling allowances for Women's Welfare Officers for attending meetings of Panchayat Union Councils

128. கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாதர் நலக்குழு தலைவிகள் பஞ்சாயத்துக் கூட்டு மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்குப் போகும்போது அவர்களுக்குப் பிரயாணப்படி கொடுக்கப்படுகிறதா?

(இ) இல்லையென்றால், ஏன்?

A.—(*a*) No, Sir.

(*b*) The question is under examination.

(அ) இல்லை.

(இ) விஷயம் பரிசீலனையில் இருக்கின்றது.

[31st March 1964

Primary Health Centres

129 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா, திரு. சா. ராமசாமி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்தில் எத்தனை பிரதம சுகாதார நிலையங்கள் (பிரைமரி ஹெல்த் ஸெண்டர்கள்) உள்ளன? மாவட்டவாரியாக.

A.—There are 137 Primary Health Centres functioning in the State as shown below :

Name of the district. (1)	*Number of Centres.* (2)
North Arcot	10
South Arcot	10
Chingleput	11
Coimbatore	23
Nilgiris	3
Madurai	14
Ramanathapuram	15
Salem	9
Thanjavur	15
Tiruchirapalli	11
Tirunelveli	10
Kanyakumari	6
Total ..	137

இம்மாநிலத்தில் கீழே குறிப்பிட்டிருக்கும் 137 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன :—

மாவட்டத்தின் பெயர். (1)	*நிலையங்களின் எண்ணிக்கை.* (2)
வட ஆற்காடு	10
தென் ஆற்காடு	10
செங்கல்பட்டு	11
கோயம்புத்தூர்	23
நீலகிரி	3
மதுரை	14
ராமநாதபுரம்	15
சேலம்	9
தஞ்சாவூர்	15
திருச்சிராப்பள்ளி	11
திருநெல்வேலி	10
கன்னியாகுமரி	6
	137

31st March 1964]

Schemes for the development of Agriculture

130 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் விவசாய அபிவிருத்திக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டனவா?

(இ) ஆமென்றால், எம்மாதிரி திட்டங்கள் தயாரிக்கப் பட்டன?

A.—(*a*) Yes.

(*b*) The Plan schemes for development of agriculture formulated in this State may be broadly classified under the following heads :—

(i) Agricultural Production;

(ii) Minor Irrigation; and

(iii) Soil Conservation.

The details of the individual schemes will be found in the publication entitled "Third Five-Year Plan—Madras State—Review of Progress for 1961–62 to 1963–64 and programme for 1964–65" placed on the table of the House on 29th February 1964.

(அ) ஆம்.

(இ) இம் மாநிலத்தில் வேளாண்மை அபிவிருத்திக்காக வகுக்கப்பட்டுள்ள திட்ட வேலைகள் கீழ்க்கண்ட தலைப்புகளில் அடங்கும்:—

(1) வேளாண்மை உற்பத்தி.

(2) சிறு பாசனம்.

(3) மண்வளப் பாதுகாப்பு.

தனித்தனி திட்டங்களின் விவரங்கள் 1964-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 29-ம் தேதி சபையில் வைக்கப்பட்ட "மூன்ருவது ஐந்தாண்டு திட்டம்—தமிழ்நாடு—1961-62 முதல் 1963-64 வரையுள்ள ஆண்டு களில் சாதனைகளும், 1964-65-ல் திட்ட வேலைகளும்" என்கிற வெளியீட்டில் காணலாம்.

[31st March 1964

Ranganatha Mudaliar Girls' High School, Tiruvarur (Acquisition of lands)

131 **கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவாரூர், ரங்கநாத முதலியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டதா ?

(இ) எத்தனை ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது?

(உ) அதற்குத் தகுந்த நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா?

A.—(*a*) Yes, Sir.

(*b*) An extent of 1 acre and 6,225 square feet of land was acquired in 1961. A further extent of 15,349 square feet of land was acquired in 1963.

(*c*) The compensation award has been passed in respect of the land acquired in 1961, but the matter has been taken to the court by the owners and the decision of the court is awaited.

As regards the lands acquired in 1963, the owners filed a writ in the High Court against acquisition and obtained a stay. The writ has since been dismissed by the High Court and the compensation will be paid as soon as the Land Acquisitioning Officer passes the award.

(அ) ஆம். நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது உண்மையே.

(இ) 1961-ல் ஒரு ஏக்கர், 6,225 சதுர அடி நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. 1963-ல் மேற்கொண்டும் 15,349 சதுர அடி நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது.

(உ) 1961-ல் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் சம்பந்தமாக நஷ்ட ஈடு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது. ஆனால் நிலத்தின் சொந்தக்காரர்கள் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். நீதி மன்றத் தீர்ப்பு இன்னும் கிடைக்கவில்லை.

1963-ல் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தைப் பொறுத்தவரையில் நிலச் சொந்தக்காரர்கள் நில ஆர்ஜிதத்தை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் ரிட் வழக்குத் தொடுத்துள்ளனர். நில ஆர்ஜித நிறைவேற்றத்துக்கு எதிராக தடை ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இந்த ரிட் வழக்கை இப்போது உயர்நீதி மன்றத்தினர் தள்ளிவிட்டனர். நில ஆர்ஜித அதிகாரி உத்தரவு பிறப்பித்தவுடன், நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

Powers vested with Village Munsifs

132 *Q.*—R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon the Minister for Works be pleased to state whether the village munsifs have been vested with the Civil and Criminal powers and are empowered to conduct such cases?

31st March 1964]

A.—Under the provisions of the Madras Village Courts Act, 1888 (Madras Act I of 1889) in villages where there are no Panchayat Courts, Village Munsifs shall be appointed by the Collector. They can try civil suits, the amount or value of which shall not exceed Rs. 200. Under the provisions of the Madras Village Police Regulation, 1821 (Madras Regulation IV of 1821), the Village Munsifs are empowered to try petty thefts not attended with aggravating circumstances and not committed by persons of notoriously bad character and where the value of the property stolen does not exceed one rupee.

சென்னை 1888-ம் ஆண்டுக் கிராமக் கோர்ட்டுகள் சட்டத்தின் (சென்னை சட்டம் 1/1889) ஷரத்துக்களின்கீழ், பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் இல்லாத கிராமங்களில் கலெக்டர் கிராம முன்சீப்புகளை நியமிப்பார். இவர்கள் ரூ. 200-க்கு மேற்படாத அல்லது அந்தத் தொகை மதிப்புக்கு மேற்படாத சிவில் வழக்குகளை மட்டுமே விசாரணை செய்ய முடியும். 1821-ம் ஆண்டு சென்னைக் கிராமப் போலீஸ் ரெகுலேஷனில் (சென்னை ரெகுலேஷன் 4/1821) ஷரத்துக்களின்படி கிராம முன்சீப்புகளுக்கு கடுமையான சூழ்நிலையிலும், கேடிகளாலும் செய்யப்படாத சொற்பத் திருட்டுகளை திருடிய சொத்தின் மதிப்பு ஒரு ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால் அவற்றை விசாரிப்பதற்கு அதிகாரம் உண்டு.

Cattle farms

133 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Government and private cattle farms in the State with their location in 1963;

(*b*) whether any financial aid is given to the private cattle farms; and

(*c*) if so, the nature and extent of help given to them?

A.—(*a*) There were five Government Cattle Farms and eight private cattle farms in the State in 1963 as given below :—

(i) *Government Cattle Farms* (5)—

1. Livestock Research Station, Hosur Cattle Farm.
2. District Livestock Farm, Pudukottai.
3. District Livestock Farm, Orathanad.
4. Ramanathapuram District Livestock Farm, Chettinad.
5. Government Dairy Farm, Ootacamund.

(ii) *Private Cattle Farms* (8) (*with owner's names*)—

1. Sri N. Nallasenapathy Sarkarai Manradiar, Proprietor, Palayakottai Cattle Farm, Palayakottai, Coimbatore district.

2. Srimathi Parvathi Arjunan, Proprietor, Kangayam Cattle Farm, Palayakottai, Coimbatore district.

3. Sri M. Janakiramakullama Naicker, "Narendra Dairy Farm (Private), Limited", Neikarapatti, Coimbatore district.

4. Sri K. S. Lakshmipathy, Superintendent, Private Cattle Farm, Idaiyakottai.

5. Sri A. Senapathy, Sankarandampalayam Cattle Farm, Sankarandampalayam, Coimbatore district.

6. Sri K. M. Desikar, Valivalam, Thanjavur district.

7. Messrs. Neikarapatty Dairies (Private), Limited, Neikarapatty, Coimbatore district.

8. Sri C. Ramaswamy Mudaliar "Agestheeswara Nilayam", Chunnampet, Chingleput district.

(b) & (c) In April 1963, the Government sanctioned the payment of an annual maintenance grant of Rs. 200 per head of cattle subject to the maximum of Rs. 10,000 in 1963–64 to Srimathi Parvathi Arjunan on behalf of her minor son Anoor Sambanda Sarkarai alias Shivakumar, the proprietor of "Kangayam Cattle Farm" as an incentive to continue the breeding of pure bred Kangayam cattle in the farm subject to the following conditions :—

(i) The grant shall be paid only for such animals as are certified for purity and conforming to the breed characteristics;

(ii) They should sell to Government as many Kangayam pedigree bulls as are required by Government at the market rate or Rs. 1,000 (rupees one thousand only) whichever is less for each bull not below the age of $2\frac{1}{2}$ years (2 teeth);

(iii) The grant should be paid only after an inspection of the farm by the Director of Animal Husbandry or his nominee as regards the satisfactory rearings of pedigree animals and the maintenance of the farm and the verification of the reasonableness of the price to be paid for the animals sold to the department; and

(iv) It shall be open to the Government to curtail the subsidy or demand recovery of any part thereof, if the conditions are not duly fulfilled or if the service rendered by the Farm is not commensurate to the subsidy.

No other private Cattle Farm owner in this State is given financial aid.

(அ) இம் மாநிலத்தில் 1963-ம் ஆண்டில் அரசாங்க விலங்கினப் பண்ணைகள் ஐந்தும், தனியார் விலங்கினப் பண்ணைகள் எட்டும் இருந்தன ; அவையாவன :—

(1) அரசாங்க விலங்கினப் பண்ணைகள் (5)—

1. விலங்கின ஆராய்ச்சி நிலையம், விலங்கினப் பண்ணை, ஹோசூர்.

2. மாவட்ட விலங்கினப் பண்ணை, புதுக்கோட்டை.

31st March 1964]

3. மாவட்ட விலங்கினப் பண்ணை, ஓர்த்தநாடு.

4. ராமநாதபுரம் மாவட்ட விலங்கினப் பண்ணை, செட்டி நாடு.

5. அரசாங்கப் பால்பண்ணை, உதகமண்டலம்.

(2) தனியார் விலங்கினப் பண்ணைகள் (8) (சொந்தக்காரர்களின் பெயர்களுடன்)—

1. திரு. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார், உரிமையாளர், பழையக்கோட்டை விலங்கினப் பண்ணை, பழையக்கோட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.

2. திருமதி பார்வதி அர்ச்சுனன், உரிமையாளர், காங்கேயம் விலங்கினப் பண்ணை, பழையக்கோட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.

3. திரு. ஜானகிராம குள்ளம நாயக்கர், "நரேந்திரா பால் பண்ணை (பிரைவேட்), லிமிடெட்" நெய்க்காரப்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம்.

4. திரு. லட்சுமிபதி, சூபரின்டென்டெண்டு, தனியார் விலங்கினப் பண்ணை, இடையக்கோட்டை.

5. திரு. சேனாபதி, சங்கராந்தம்பாளையம் விலங்கினப் பண்ணை, சங்கராந்தம்பாளையம், கோயம்புத்தூர்.

6. திரு. தேசிகர், வலிவலம், தஞ்சாவூர் மாவட்டம்.

7. மெஸர்ஸ் நெய்க்காரப்பட்டி பால்பண்ணை (பிரைவேட்) லிமிடெட், நெய்க்காரப்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம்.

8. திரு. ராமசுவாமி முதலியார், அகஸ்தீஸ்வர நிலையம், சூளைமேட்டை, செங்கற்பட்டு மாவட்டம்.

(இ & (உ) விலங்கினம் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் ஆண்டு தோறும் விலங்குப் பராமரிப்பு மானியம் ஒன்றை அதிக அளவு ரூ. 10,000-க்கு உட்பட்டு திருமதி பார்வதி அர்ச்சுனனுக்கு அவரது மைனர் மகன் சிவகுமார் என்கிற அன்னூர் சம்பந்த சர்க்கரைக்கு (இவர் காங்கயம் விலங்கினப் பண்ணையின் உரிமையாளர்) 1963-64-ல் செலுத்தும்படி 1963 ஏப்ரலில் அரசாங்கம் அனுமதி அளித்தது. எனவே, அவரது காங்கயம் பண்ணையில் உயர்ந்த சாதி மாடுகளைத் தொடர்ந்து இனப்பெருக்கம் செய்வதற்கு ஒரு தூண்டு கோலாகவே இந்த மானியம் பின்வரும் நிபந்தனைகட்குட்பட்டு அளிக்கப்படுகிறது :—

(1) அசல் காங்கய மாடுகள் என்றும், அந்த ரக மாடுகளின் சிறப்பியல்புகளை அனுசரித்துள்ளவை என்றும் சான்று கூறப் பெற்ற மாடுகளுக்கு மட்டுமே இந்த மானியம் வழங்கப்படும்.

[31st March 1964

(2) எத்தனை காங்கய எருதுகள் அரசினர்க்குத் தேவையோ அவற்றை மார்க்கெட் விலை அல்லது எருது ஒன்றுக்கு ரூ. 1,000 (ஆயிரம் ரூபாய் மட்டும்) இதில் எது குறைவோ அதற்கு அரசினருக்கு விற்க வேண்டும். எருது 2½ வயதுக்கு (2 பல்லுக்கு) குறையாமலிருக்க வேண்டும்.

(3) விலங்கின வளர்ப்புத் துறை அல்லது அவரால் நியமனம் செய்யப் பெற்றவர் பண்ணையைப் பார்வையிட்டு, காங்கய எருதுகள் திருப்திகரமாக வளர்க்கப்படுகின்றனவா என்பதையும் பண்ணை நல்ல முறையில் வைத்து வரப்படுகிறதா என்பதையும் கண்டறிவார். துறையினருக்கு விற்கப்படுகிற விலங்கினங்களுக்குக் கொடுக்கத்தக்க விலை நியாயமானதுதானா என்பதையும் அவர் ஆராய்வார். அதன் பின்னர்தான் மானியம் வழங்கப்படும்.

(4) இந்த நிபந்தனைகள் சரிவர அனுசரிக்கப்படாவிட்டாலும், இப்பண்ணை புரியும் தொண்டு மானியத் தொகைக்கு ஏற்றபடி திறமையாக இல்லாவிட்டாலும் மானியத் தொகையைக் குறைக்கவோ அதன் யாதொரு பாகத்தைத் திருப்பி வசூலிக்கவோ அரசினர்க்கு அதிகாரம் உண்டு.

இம்மாநிலத்திலுள்ள வேறெந்தத் தனியார் விலங்கினப் பண்ணையின் உரிமையாளருக்கும் பண உதவி கொடுக்கப்படுவதில்லை.

Allotment of houses by the Accommodation Controller

134 கேள்வி—திரு. கே. சீமைச்சாமி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் வருஷத்தில் ஆகஸ்ட் மாதம் முடிய எத்தனைபேர் இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரி (Accommodation Controller) மூலம் இடவசதிக்காக மனுக்கள் பதிவு செய்திருக்கின்றனர்?

(இ) அவர்களில் எத்தனைபேர் மாற்றப்பட்ட (Transferred Employees) அலுவலர்கள்?

(உ) அவர்களில் எத்தனை பேர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டன?

A.—(a) 2,073.

(b) 1,682

(c) 639 of whom 591 were 'recently transferred' Officers.

(அ) 2,073 பேர்.

(இ) 1,682 பேர்.

(உ) 639 பேருக்கு. இவர்களில் 591 பேர் சமீபத்தில் மாற்றலானவர்கள்.

31st March 1964]

Panchayats in the State

135 கேள்வி—திரு. எ. கே. சுப்பையா: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1962-63 முடிய எத்தனை பஞ்சாயத்துக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(இ) அவைகளில் கலைக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் எத்தனை ?

A.—(a) Action has been taken in respect of the following Panchayats in the Madras State during the year 1962–63 :—

(1) Maravapalayam (Coimbatore district).
(2) Nanganallur (Chingleput district).
(3) Sembarambattu (South Arcot district).
(4) Panaiyur (Madurai district).
(5) Vasudevanallur (Tirunelveli district).
(6) Uthukottai (Chingleput district).
(7) Adambakkam (Chingleput district).
(8) Madhavaram (Chingleput district).
(9) Sholavandan (Madurai district).
(10) New Gummidipoondi (Chingleput district).
(11) Melpathy (South Arcot district).
(12) Periapatti (Madurai district).
(13) Kallur (Tiruchirappalli district).

(b) Of the above, the following Panchayats have been dissolved during 1962-63 :—

(1) Sembarambattu.
(2) Panaiyur.
(3) Vasudevanallur.
(4) Sholavandan.

(அ) தமிழ்நாட்டில் 1962-63 முடிய கீழ்க் கண்ட பஞ்சாயத்துகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது :—

(1) மரவபாளையம் (கோயம்புத்தூர் ஜில்லா).
(2) நங்கநல்லூர் (செங்கற்பட்டு ஜில்லா).
(3) செம்பரம்பட்டு (தென்னாற்காடு ஜில்லா).
(4) பனையூர் (மதுரை ஜில்லா).
(5) வாசுதேவநல்லூர் (திருநெல்வேலி ஜில்லா).
(6) ஊத்துக்கோட்டை (செங்கற்பட்டு ஜில்லா).
(7) ஆதம்பாக்கம் (செங்கற்பட்டு ஜில்லா).
(8) மாதவரம் (செங்கற்பட்டு ஜில்லா).
(9) சோழவந்தான் (மதுரை ஜில்லா).
(10) புது கும்மிடிபூண்டி (செங்கற்பட்டு ஜில்லா).
(11) மேல்பாதி (தென் ஆற்காடு ஜில்லா).
(12) பெரியபட்டி (மதுரை ஜில்லா).
(13) கல்லூர் (திருச்சிராப்பள்ளி ஜில்லா).

(இ) மேற் சொன்னவைகளில் 1962-63 முடிய கீழ்க்கண்ட பஞ்சாயத்துக்கள் கலைக்கப்பட்டன :—

(1) செம்பரம்பட்டு.
(2) பனையூர்.
(3) வாசுதேவநல்லூர்.
(4) சோழவந்தான்.

Villages allotted to the Kothari Sugars, Limited, Tiruchirappalli

136 *Q.*—SRI S. RAMASAMY : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the names of villages attached to the Kothari Sugars, Ltd., in Tiruchirappalli district;

(*b*) of the areas referred to in item (1) the extent of land in which sugar cane was cultivated in 1963; and

(*c*) out of the sugarcane cultivation in 1963, the area registered with the factory for supply of cane?

A.—(*a*) A list[a] of village allotted to Messrs. Kothari Sugars Ltd., Tiruchirappalli is placed on the Table of the House.

(*b*) The extent of land in which sugarcane is grown in these villages is 5,180 acres.

(*c*) Out of the area of 5,180 acres, 2,983 acres have been registered with the factory for supply of cane.

(அ) திருச்சி மாவட்டம் கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள கிராமங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று[a] சபையில் வைக்கப்பட்டுள்ளது.

(இ) இந்தக் கிராமங்களில் கரும்புச் சாகுபடியின் கீழுள்ள நிலங்களின் பரப்பு 5,180 ஏக்கரா.

(உ) இந்த 5,180 ஏக்கராவில் 2,983 ஏக்கரா சர்க்கரை ஆலைக்கு கரும்பு சப்ளை செய்வதாக ஒப்புக்கொண்டு பதிவு செய்யப் பட்டுள்ளது.

Prince of Arcot Endowments

137 கேள்வி—திரு. எம். எஸ். மணி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆற்காடு இளவரசர் என்டோமெண்டு நிர்வாகத்தில் திருச்சி கலெக்டருக்கு இருந்த அதிகாரம் இப்போது வஃபு போர்டுக்கு மாற்றப்பட்டுவிட்டதா ?

A.—The Wakf Act, 1954 (Central Act 29 of 1954), vests in the State Wakf Board only the general superintendence of all wakfs in the State. The actual management of any wakf is not taken out by the Wakf Board. Since the Prince of Arcot Endowments fall within the definition of 'Wakf' contained in the Wakf Act, the agent to the endowments has registered the wakfs at the office

[a] Printed as Appendix VI on pages 863–868.

of the State Wakf Board, Madras, renders accounts and pays contribution to the Wakf Board and is complying with the provision of the Wakf Act in other respects. The powers given to the Collector of Tiruchirappalli by the Rules contained in Schedule 'C' to the Prince of Arcot Endowments Act, 1922 (Madras Act II of 1923) have not been transferred to the Wakf Board.

1954-ம் ஆண்டு வஃபு சட்டம் (முஸ்லீம் அறநிலையங்கள்) மத்திய சட்டம் 29/1954) நமது மாநிலத்திலுள்ள எல்லா வஃபுக்களையும் பொதுவாக மேற்பார்வையிடுவதற்கு மட்டுமே அரசாங்க வஃபு போர்டுக்கு அதிகாரம் அளிக்கிறது. ஒரு வஃபின் நிர்வாகத்தையே வஃபு போர்டு மேற்கொள்வது இல்லை. ஆற்காடு இளவரசர் என்டோமென்டுகள், வஃபுச் சட்டத்தின் கீழ் "வஃபு" என வரையறுக்கப்பட்டுள்ளதால், மேற்படி என்டோமெண்ட் ஏஜெண்ட் இந்த வஃபுக்களை சென்னையிலுள்ள அரசாங்க வஃபு போர்டு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார். மேலும் அவர் வஃபு போர்டுக்குக் கணக்குகள் கொடுக்கிறார். அதற்குச் சந்தா செலுத்துகிறார். மற்ற அம்சங்களிலும் வஃபுச் சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து வருகிறார். 1922-ம் ஆண்டு ஆற்காடு இளவரசர் என்டோமெண்ட் சட்டத்தின் (சென்னை சட்டம் 2/1923) 'சி' அட்டவணையைச் சேர்ந்த விதிகளில் திருச்சிராப்பள்ளி கலெக்டருக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் வஃபு போர்டுக்கு மாற்றப்படவில்லை.

Key Village Blocks

138 **கேள்வி—திரு. கி. நாராயணஸ்வாமி பிள்ளை :**
திரு. எம். வி. கரிவேங்கடம் : } கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் மூன்றாவது திட்ட காலத்தில் எங்கெங்கு புதிய கேந்திர கால்நடை அபிவிருத்தி நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் ?

(இ) அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

A.—(*a*) Eighteen Key Village Blocks have so far been established under the Third Five-Year Plan. The places where new Key Village Blocks are to be established during 1964–65 and 1965-66 have not yet been decided but they will have to be contiguous to the existing key village areas.

(*b*) A sum of Rs. 66 lakhs has been provided in the Third Five-Year Plan for the establishment of new Key Village Blocks in this State.

(அ) மூன்றாவது திட்டத்தில் இதுவரை பதினெட்டு கேந்திரக் கிராம வட்டாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1964-65, 1965-66-ல் கேந்திரக் கிராம வட்டாரங்கள் நிறுவப்படவிருக்கும் இடங்களைக் குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை. ஆனால் தற்போதைய கேந்திரக் கிராமப் பகுதிகளை இவை அடுத்திருக்க வேண்டும்.

[31st March 1964

(இ) இம் மாநிலத்தில் புதிய கேந்திரக் கிராம வட்டாரங்களை நிறுவ மூன்றாவது திட்டத்தில் ரூபாய் 66 லட்சம் வகை செய்யப் பட்டுள்ளது.

Tourist buses (Exemption from payment of taxes)

139 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த பஸ் கம்பெனிகளின் டூரிஸ்ட் பஸ்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது ?

(இ) வரி விலக்கு அளித்ததற்குக் காரணமென்ன ?

A.—(*a*) No tax exemption has been allowed; but tax at concessional rate, i.e., one-third of the normal tax is levied for the luxury coaches which are run by :—

(1) Southern Roadways (Private), Limited, Madurai;

(2) Anamallai Bus Transport (Private), Limited, Pollachi.

(3) Sri Jayavilas (Private) Limited, Aruppukottai;

(4) Sri Anjaneya Motor Transport (Private), Limited, Erode ;

(5) Sri Rama Vilas Services, Limited, Kumbakonam;

(6) Kodaikanal Motor Union (Private), Limited, Madurai;

(7) Raman & Raman (Private), Limited, Kumbakonam; and

(8) Veecumsees Bluebird Service, Madras.

(*b*) This tax concession has been allowed to the luxury coaches as they cannot earn regular income like ordinary buses and also to encourage tourist traffic.

(அ) வரி விலக்கு எதுவும் அளிக்கப்படவில்லை. ஆனால், பின் வரும் கம்பெனிகள் மட்டும் உல்லாச எழில் வண்டிகளுக்கு மட்டும் சகாய வரி, அதாவது சாதாரண வரியில் 1/3 பங்கு விதிக்கப் படுகிறது :

(1) சதர்ன் ரோட்வேஸ் (பி), லிமிடெட், மதுரை.

(2) ஆனமலை பஸ் டிரான்ஸ்போர்ட் (பி), லிமிடெட், பொள்ளாச்சி.

(3) ஸ்ரீ ஜயவிலாஸ் (பி), லிமிடெட், அருப்புக்கோட்டை.

(4) ஸ்ரீ ஆஞ்சனேயா மோட்டார் டிரான்ஸ்போர்ட் (பி), லிமிடெட், ஈரோடு.

(5) ஸ்ரீ ராமவிலாஸ் சர்வீஸ், லிமிடெட், கும்பகோணம்.

(6) கொடைக்கானல் மோட்டார் யூனியன் (பி), லிமிடெட், மதுரை.

(7) ராமன் அண்டு ராமன் (பி), லிமிடெட், கும்பகோணம்.

(8) வீகம்ஸி புளூபேர்டு சர்வீஸ், சென்னை.

31st March 1964]

(இ) உல்லாச எழில் வண்டிகளுக்கு சாதாரண பஸ்களுக்குக் கிடைக்கும் வருமானத்தைப் போல் எப்போதும் வருமானம் கிடைப்பதில்லை ஆதலாலும், உல்லாச பயணிகள் போக்குவரத்துக்கு ஊக்கமளிக்க வேண்டியிருப்பதாலும் இந்த வரிச்சலுகை அளிக்கப்படுகிறது.

Luxury Coaches in the State.

140 **கேள்வி —திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் டூரிஸத்தை ஊக்குவிப்பதற்காக 'ஆடம்பர வண்டிகள்' எத்தனை உள்ளன?

(இ) அந்த ஆடம்பர வண்டிகள் சர்க்கார் துறையில் எத்தனை? தனியார் துறையில் எத்தனை உள்ளன?

(உ) அந்த வண்டிகளுக்கு என்ன கட்டணம் பிரயாணிகளிடமிருந்து வாங்கப்படுகிறது?

A.—(*a*) 9.

(*b*) Public sector—1;
Private sector—8.

(*c*) In respect of luxury coaches in the private sector available in the mofussil town, hire charges are collected at a rate not exceeding 9 nP. per passenger per mile or Rs. 3 per mile for the whole vehicle. The rate allowed for the one luxury coach in Madras City is as follows :—

(i) for plying within the City limits of Madras Rs. 10 per hour on time basis.

(ii) for plying outside the city limits, 90 nP. per kilometer of the distance covered.

The hire charges for the luxury coach in the public sector are as follows :—

Reservation fee		Rs. 10
Detention charges		Rs. 250 per day
Mileage charges		Re. 0·50 nP. per mile.

(அ) 9.

(இ) பொதுத்துறை 1; தனியார் துறை 8.

(உ) வெளியூர்களில் பஸ் முதலாளிகட்குச் சொந்தமான 'உல்லாச பஸ்களில்' பிரயாணி ஒருவருக்கு மைல் ஒன்றுக்கு 9 காசுக்கு அதிகப் படாத கட்டணம் அல்லது வண்டி

முழுவதற்கும் மைல் ஒன்றுக்கு ரூபாய் 3-க்கு அதிகப்படாத கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சென்னை மாநகரில் உள்ள 'உல்லாச பஸ்களில்' கட்டண விவரம் வருமாறு :—

(1) சென்னை மாநகர எல்லைகளுக்குள் மணிக்கு ரூபாய் 10.

(2) சென்னை மாநகர எல்லைகளுக்கு வெளியே போய்வரும் தூரத்தில் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 90 காசு.

பொதுத்துறையில் 'உல்லாச பஸ்களின்' வாடகைக் கட்டண விவரம் வருமாறு :—

ரிசர்வேஷன் கட்டணம் ரூபாய் 10.

பஸ்ஸை நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் **(Detention charges)** ரூபாய் 250 நாள் ஒன்றுக்கு.

மைலேஜ் கட்டணம் 50 காசு மைல் ஒன்றுக்கு.

Buildings for Panchayat Unions

141 Q.—Sri G. RAJARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a whether the sites for the construction of buildings for the following Panchayat Unions have been selected :—

Olakkur, **Mailam** } **In Tindivanam taluk.**

Vallam **in Gingee taluk; and**

(b) if so, when the construction of these buildings will be taken up?

A.—(a) The site for the construction of the office building of the Vallam Panchayat Union has been selected. The selection of the sites in respect of the Mailam and Olakkur Panchayat Unions has not yet been finalised.

(b) The construction of buildings will be taken up as soon as the ban imposed for the construction of new buildings is lifted or earlier, if circumstances permit.

(அ) வல்லம் பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கான மனை தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. மயிலம், ஒலக்கூர் பஞ்சாயத்து யூனியன்கள் சம்பந்தமாக மனைகளைத் தெரிந்தெடுப்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை.

(இ) புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கான தடை நீக்கப்பட்ட பிறகு கட்டிட வேலை மேற்கொள்ளப்படும்; அல்லது சந்தர்ப்பங்கள் அனுகூலமாயிருந்தால் இன்னும் முன்னதாகவே அவ்வேலை மேற்கொள்ளப்படும்.

31st March 1964]

Three-Language Policy

142 கேள்வி—திரு. சி. எம். அம்பிகாபதி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) இம்மாநிலத்தில் உயர் நிலைப்பள்ளிகளில் மும்மொழித் திட்டம் அமலிலிருக்கிறதா ?

(இ) அப்படியானால், முதல் மொழி, இரண்டாம் மொழி, மூன்றாம் மொழி எவை?

A—(a) Yes.

(b) *Part I.*—Regional language or mother-tongue when it is different from the regional language.

Part II.—Hindi or any other Indian Language not included in Part I.

Part III.—English or any other non-Indian language.

(அ) ஆம்.

(இ) பாகம் 1.—பிராந்திய மொழி அல்லது தாய்மொழி பிராந்திய மொழியாக இல்லாதபோது தாய்மொழி.

பாகம் 2.—ஹிந்தி அல்லது பாகம் 1-ல் சேராத வேறொரு இந்திய மொழி.

பாகம் 3.—ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத வேறொரு மொழி.

Upgrading of Panchayats (Tiruchirappalli district)

143 கேள்வி—திரு பி. முருகையன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்துக்களில் எவையேனும் முதல் நிலை பஞ்சாயத்துக்களாக ஆக்க விண்ணப்பங் கள் அனுப்பியுள்ளனவா ?

(இ) விவரமென்ன ?

A.—(a) & (b) Presumably the hon Member refers to the upgrading of any of the Panchayat for purpose of appointment of Executive Officer. During March 1963, the Executive Officer, Kadiyapatti Town Panchayat in Tiruchirappalli district has submitted proposals for the upgrading of the said panchayat to Grade I from Grade II, and the proposals were deferred by the Additional Development Commissioner, Madras as the average income was just Rs. 20,000 per year.

(அ) & (இ) நிர்வாக அதிகாரியை நியமிப்பதற்காக பஞ்சாயத் துக்களை முதல் நிலை பஞ்சாயத்துக்களாக உயர்த்துவதுபற்றி கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார் என நினைக்கிறேன். 1963 மார்ச் மாதத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், கடியாப்பட்டி நகரப்

[31st March 1964

பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி அப்பஞ்சாயத்தை இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலைக்கு உயர்த்தும்படிக் கோரி அதற்கான திட்டங்களை அனுப்பினர். மேற்படி பஞ்சாயத்தின் ஆண்டுச் சராசரி வருமானம் 20,000 ரூபாயாக மட்டுமே இருப்பதால், சென்னைக் கிராம அபிவிருத்திக் கமிஷனர் இந்தத் திட்டத்தை ஒத்திப் போட்டுள்ளார்.

Salem Municipality (running of cinema theatre)

144 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) Whether the Government have received a resolution from Salem Municipal Council requesting the Government to permit Salem Municipality to run a cinema theatre; and

(*b*) if so, the action taken thereon?

A.—(*a*) & (*b*) No resolution from the Salem Municipal Council to permit the Salem Municipality to run a cinema theatre has been received. However, in the welcome address presented to Minister (Local Administration) on 31st December 1963, the Salem Municipal Council has, among others, requested the permission of the Government for running a cinema theatre to augment its revenue. The matter is under the consideration of the Government.

(அ) & (இ) சினிமா தியேட்டர் ஒன்றை நடத்துவதற்குச் சேலம் நகராட்சிக்கு அனுமதி வழங்கும்படி சேலம் நகராட்சி மன்றத்தினிடமிருந்து தீர்மானம் எதுவும் வரவில்லை. எனினும் 31—12—19663ல் தல நிர்வாக அமைச்சருக்கு வாசித்தளித்த வரவேற்புரையில் மற்றக் கோரிக்கைகளுடன், சேலம் நகராட்சி மன்றம் சினிமா தியேட்டர் ஒன்றை நடத்தித் தனது வருவாயைப் பெருக்கிக்கொள்ள அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்கப்பட்டு இருந்தது. இதனை அரசாங்கம் யோசித்து வருகிறது.

Government Salt Glazed Pipe Factory (Vriddhachalam)

145 கேள்வி.—திரு. கே. நாராயணஸ்வாமி பிள்ளை: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலத்தில் சர்க்கார் பைப் தொழிற்சாலை அமைக்க எவ்வளவு செலவாயிற்று ?

(இ) இத்தொழிற்சாலையில் எவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள் ?

(உ) இத்தொழிற்சாலையில் என்னென்ன சாமான்கள் செய்யப் படுகின்றன ?

(எ) மேற்படி சாமான்களை விற்பனை செய்ய அரசாங்கம் என்ன முறையை பின்பற்றியுள்ளது ?

31st March 1964]

A.—(*a*) The amount spent towards establishment of the Salt Glazed Pipe Factory, Vridhachalam, is as follows :—

Non-recurring—Rs. 4,73,028·09.

Recurring—Rs. 1,60,365·56.

(*b*) Total number of persons working in the Unit is 40. As soon as full production is started in the Unit more than 100 workers will be employed.

(*c*) Salt glazed pipes.
Round mouth gully traps.
Round mouth quarter bends.
Junctions single Tee.
Double Tee.
Y single.
Y double.

(*d*) The Unit is now under experimental production and will be commencing regular production very shortly. The Unit will meet Government demands direct.

(அ) விருத்தாசலம் மெருகிட்ட குழாய்த் தொழிற்சாலை அமைக்க செலவான தொகை வருமாறு:—

மீளாத இனச் செலவு—ரூ. 4,73,028.09.

நடைமுறையில் செலவு—ரூ. 1,60,365.56.

(இ) இப்பிரிவில் மொத்தம் 40 பேர் வேலை செய்கிறார்கள். முழு உற்பத்தி தொடங்கும்போது 100 பேர்களுக்கு மேல் வேலைக்கமர்த்திக் கொள்ளப்படுவர்.

(உ) மெருகிட்ட நேர்க் குழாய்கள்.
வட்டமுக ஜலதாரைக் கண்ணி.
வட்டமுக குவார்ட்டர் பெண்டு குழாய்கள்
ஒற்றை இணைப்பு 'டி' குழாய்கள்.
இரட்டை 'டி' குழாய்கள்.
ஒற்றை 'ஒய்' குழாய்கள்.
இரட்டை 'ஒய்' குழாய்கள்.

(எ) இப்பிரிவு இப்போது முன்னோடி அடிப்படையில் உற்பத்தி செய்து வருகிறது. இது விரைவில் முறைப்படி உற்பத்தியைத் தொடங்கும். இப்பிரிவு அரசாங்கத் தேவைகளை நேரடியாகப் பூர்த்தி செய்யும்.

Colleges in the State

146 கேள்வி.—திரு. கே. நாராயணஸ்வாமி பிள்ளை: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் எந்தெந்த மாவட்டத்தில் எத்தனை கல்லூரிகள் இருக்கின்றன ?

[31st March 1964

(இ) அரசினர் கல்லூரிகள் எத்தனை ? தனியார் கல்லூரிகள் எத்தனை?

A.—(a) & (b)

District.	Aided Colleges.	Government colleges.	Total.
(1)	(2)	(3)	(4)
Madras	9	3	12
Chingleput ..	3	..	3
Coimbatore ..	7	1	8
Madurai	8	..	8
Tiruchirappalli ..	5	1	6
Thanjavur ..	4	2	6
Tirunelveli ..	9	..	9
Ramanathapuram	6	..	6
Kanyakumari ..	2	..	2
Nilgiris	..	1	1
North Arcot ..	4	..	4
Salem	2	1	3
Total ..	59	9	68

Inter-caste marriages

147 கேள்வி.—திரு. ஆர். நாராயணன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கலப்பு திருமணம் செய்பவர்களுக்குப் பரிசு ஏதேனும் வழங்க உத்தேசமுண்டா ?

A.—No.

இல்லை.

Co-operative Farming Society for Sengamangalam

148 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை தாலூக்கா, செங்கமங்கலம் கிராமத்தில் சர்க்கார் தரிசு நிலத்தை, கூட்டுறவு விவசாய சங்கம் அமைத்துத் தரும்படி கோரி மனு வந்ததா ?

(இ) அப்படி வந்திருந்தால் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

A.—(*a*) The Deputy Registrar, Pattukottai has reported that the landless Harijans in the Sengamangalam village have approached him for the formation of a co-operative farming society.

(*b*) Action has been taken by the Extension Officer (Co-operation), Peravurani, for the formation of a Tenants' Farming Co-operative Society in Sengamangalam village. The Deputy Registrar has reported that the proposals will have to be finalised after the availability of lands for the formation of the society is determined by the Revenue authorities. The Deputy Registrar is pursuing action in this regard.

31st March 1964]

(அ) செங்கமங்கலம் கிராமத்தில், நிலமற்ற அரிசன குடிகள் கூட்டுறவுப் பண்ணைச் சங்கம் ஒன்றை அமைப்பதற்காகத் தம்மைப் பார்த்ததாய் பட்டுக்கோட்டை துணைப்பதிவாளர் தெரிவித்திருக்கிருர்.

(இ) செங்கமங்கலம் கிராமத்தில் குத்தகைக்கார் பண்ணைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைக்க பேராவூரணி (கூட்டுறவு) வளர்ச்சி அதிகாரி நடவடிக்கை எடுத்திருக்கிருர். இச்சங்கம் அமைப்பதற்குத் தேவையான நிலங்கள் கிடைக்கும் நிலைமையைக் குறித்து ரெவின்யூ அதிகாரிகள் தெரிவித்த பிறகு, இந்தத் திட்டத்தை முடிவு செய்யவேண்டுமென்று துணைப் பதிவாளர் அறிக்கை அனுப்பியிருக்கிருர். இதுசம்பந்தமாகத் துணைப் பதிவாளர் நடவடிக்கை எடுத்து வருகிருர்.

Special rebate for handloom cloth

149 **கேள்வி—புலவர் கா. கோவிந்தன்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி விற்பனை நிலையங்களில், வழக்கமாக அளிக்கப்படும் கழிவுத் தொகையோடு, அதிகமாக அளிக்கப்படும் சிறப்புக் கழிவுத் தொகை, ஓர் ஆண்டில் எந்த எந்த விழாக்களின்போது, எத்தனை நாட்களுக்கு அனுமதிக்கப் படுகிறது?

A.—A special additional rebate at the rate of 5 nP. in the rupee will be allowed by the Weavers' Co-operative Societies in this State on genuine retail sales of handloom cloth for a total period of 15 days in the year, i.e., for eight days during the Aunual All India Handloom Week Celebrations and for seven days on suitable festival occasions to be chosen by the State Government.

ஓர் ஆண்டில் மொத்தம் 15 நாட்களுக்கு, அதாவது ஆண்டு தோறும் நடைபெறுகிற அகில இந்தியக் கைத்தறி வார விழாக் காலத்தில் எட்டு நாட்களுக்கும் மாநில அரசினர் தேர்ந்தெடுக்கக் கூடிய தகுந்த பண்டிகைக் காலங்களில் 7 நாட்களுக்கும் கைத்தறித் துணி சில்லறை விற்பனைகள்மீது இந்த மாநில நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கங்கள் ரூபாய்க்கு 5 ந. பை. வீதம் விசேஷக் கூடுதல் ரிபேட் கொடுக்கும்.

Government offices located in seashore, Madras

150 **கேள்வி—புலவர் கா. கோவிந்தன்:** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

[31st March 1964

(அ) சென்னைக் கடற்கரையில் உள்ள கட்டிடங்களில் எந்தக் கட்டிடத்தில் எந்த அலுவலகம் இருக்கிறது என்பதை அறிவிக்கும் பெயர்ப் பலகைகள் இல்லாமையால் பொதுமக்களுக்கு உண்டாகும் தடுமாற்றத்தைத் தவிர்க்கும் வகையில் பெயர்ப் பலகை அமைக்குமாறு விண்ணப்பம் எதுவேனும் வந்துள்ளதா ?

(இ) அதன்மீது அரசு எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

A.—(*a*) No.

(*b*) This question does not arise.

(அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

Number of persons registered in the Employment Exchanges

151 **கேள்வி—திரு. வி. ஆர். பெரியண்ணன்** *: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் 1963-ம் ஆண்டில் ஜனவரி முதல் டிசம்பர் முடிய வேலை தேடித்தரும் நிலையங்களில் மாவட்டவாரியாக பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) இதில் பட்டதாரிகளின் எண்ணிக்கை என்ன ?

(உ) இவர்களில் எவ்வளவு பேருக்கு வேலைகள் கிடைத்தன ?

(*a*), (*b*) & (*c*) A statement [a] is placed on the Table of the House.

(அ), (இ) & (உ) சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப் பட்டுள்ளது.

Agricultural Income-Tax Compounding of

152 **கேள்வி—திரு. எம். வி. கரிவேங்கடம்** *: கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

1962-63-ம் ஆண்டு விவசாய வருமானவரி சட்டப்படி மாவட்டவாரியாக (ராஜி) compound *செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ?*

[a] rin ted as Appendix VII on page 868.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

31st March 1964]

A.—The following particulars are furnished—

District. (1)	Number of persons who were permitted to compound. (2)
Coimbatore	4,168
Kanyakumari	..
Madras and Chingleput	1,508
Madurai	2,159
North Arcot	1,192
Ramanathapuram.	476
Salem	1,751
South Arcot	3,437
Thanjavur	11,307
The Nilgris	601
Tiruchirappalli	2,071
Tirunelveli	227
Total ...	28,897

Acquisition of land for the Neyveli-Salem Steel Project.

153 கேள்வி—திரு. எம். வி. கரிவேங்கடம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் இரும்பு தொழிற்சாலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன?

A.—Notification under section 4 (1) of the Land Acquisition Act, 1894 have been pubished in the *Fort St. George Gazette* in respect of about 27,500 acres of land for the Neyveli-Salam Steel Project for the Steel Plant, township and ancillary industries.

சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கும் அதைச் சார்ந்த மற்ற தொழிற்சாலைகளுக்குமாக 1894-ம் வருஷ நில ஆர்ஜித சட்டத்தின் 4 (1) பிரிவின்கீழ் சுமார் 27,500 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது என்று கெஜட்டில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

Building for the Sub-Divisional Magistrate's Court, Dharmapuri.

154 கேள்வி—திரு. எம். வி. கரிவேங்கடம்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தர்மபுரியில் சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு கட்டிடம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

[31st March 1964

A.—The scheme for construction of the Sub-Divisional Magistrate's Court, Dharmapuri, has been deferred for the duration of the National Emergency.

தேசீய நெருக்கடி நிலை தீரும்வரையில் தர்மபுரியில் சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குக் கட்டிடம் கட்டும் திட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

Eucalyptus oil units.

155 கேள்வி—திரு. எம். வி. கரிவேங்கடம்: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் நீலகிரி தைலம் உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகள் எங்கெங்கு உள்ளன?

A.—There is a Small Scale Industrial Unit at Coonoor, besides 290 Units in small sheds in the Nilgiris district producing eucalyptus oil.

நீலகிரி மாவட்டம் குன்னூரில் நீலகிரி தைலம் உற்பத்தி செய்யும் சிறு ரகத் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இது தவிர, அதே மாவட்டத்தில் 290 தொழில் நிலையங்கள் சிறு கொட்டகைகளில் நீலகிரித் தைலம் தயாரித்து வருகின்றன.

Electrification of Harijan colonies.

156 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் ஹரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க மின்சார போர்டிற்கு அரசினர் எவ்வளவு மானியம் வழங்கி இருக்கின்றனர்?

(இ) எந்தெந்த ஹரிஜன காலனிக்காக எவ்வளவு தொகை வழங்கியுள்ளது?

A.—(*a*) & (*b*). A statement [a] is placed on the Table of the House.

Causeway across Thirumanimuthar.

157 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் மாவட்டம் வீரபாண்டி பஞ்சாயத்து யூனியன் எல்லைக்கு பனமரத்து யூனியன் வழியாக மல்லூர் செல்லும் பாதையின் குறுக்கே செல்லும் திருமணிமுத்தாற்றில் ஒரு பாலம் கட்ட உத்தேசமுண்டா?

[a] Printed as Appendix VIII on pages 869–883.

31st March 1964]

A.—There is a proposal to construct a conseway across Thirumanimuthar river at miles 5/4 of Mallur–Veerapandi Road in Salem district.

சேலம் மாவட்டத்தில் மல்லூர்-வீரபாண்டி சாலையின் 5/4-வது மைலில், திருமணிமுத்தாற்றின் குறுக்கே ஒரு தாம்போகி கட்டும் திட்டம் உள்ளது.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—PRIVILEGE MATTER.

Alleged bad treatment to a Member by the Director of Harijan Welfare.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். அதைப்பற்றி நான் தகவல் அறிந்து சொன்னபிறகு தாங்கள் 'ப்ரைமாபேசி கேஸ்' இருந்தால் எடுத்துக் கொள்ளலாம் என்று கூறினேன். அதற்குப் பிறகு தகவல் தெரிந்து அதைப்பற்றி இந்த மன்றத்தில் விளக்கினேன். அதற்கு மேலும் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'நான் கனம் உறுப்பினர் அவர்களையும், அந்த அதிகாரியையும், அப்போது கூட இருந்த வேறு ஒரு சட்ட மன்ற உறுப்பினரையும் வைத்து விசாரிக்கலாம்' என்று கூறினார்கள். நேற்று மூன்று பேரையும் அழைத்து கலந்து பேசினோம். பேசிய விவரத்தை இங்கே சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். நான் 'போனதை மறந்து விடுவது நல்லது' என்று கூறினேன். இப்போது இரு சாராரும் நடந்ததைப்பற்றி வருந்துகிறார்கள். அவர்கள் இருவரும் கை குலுக்கி விடைபெற்றுக் கொண்டார்கள். அதுதான் நிலைமை. ஆகவே, இதிலே உரிமைப் பிரச்சினை எதுவும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : In the circumstances of the case placed before the House, I hold that the matter does not involve a question of privilege.

III.—CALLING ATTENTION NOTICE.

SRI J. MATHA GOWDER : May I call the attention of the Hon. Minister on behalf of Sri T. Karcha Gowder, Sir?

MR. SPEAKER : There is no rule for the hon. Member Sri J. Matha Gowder alone.

IV.—ANNOUNCEMENTS.

(1) ELECTION TO THE HOUSE COMMITTEE

MR. SPEAKER : I have to announce to the House that the following eleven Members were duly nominated for the election of eleven Members of the Madras Legislative Assembly to the House Committee for 1964–65 :—

1. Sri KR. RM. Kariamanickam Ambalam.
2. Sri K. Thirupathi.
3. Sri C. G. Viswanathan.

4. Sri C. V. Velappan.
5. Sri K. R. Sambandam.
6. Sri V. S. Arunachalam.
7. Sri M. Kulandaiswami Gounder.
8. Sri M. Maruthanayagam Pillai.
9. Sri V. Ellamma Naidu.
10. Sri A. S. Dhakshinamoorthy Gounder.
11. Sri S. Ramalingam.

As the number of candidates who were duly nominated is equal to the number of vacancies to be filled, viz., *eleven*, I hereby declare them to have been duly elected to the House Committee.

Under Rule 221 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate—

1. Sri G. Rajaram,
2. Sri V. Ramanathan,
3. Sri P. Murugaiyan, and
4. Sri K. Cheemaichamy

to be Members of the House Committee.

The Deputy Speaker is the ex-officio Chairman of the House Committee.

(2) ELECTION TO THE COMMITEE OF PRIVILEGES.

MR. SPEAKER : I have to announce to the House that the following fifteen Members were duly nominated for the election of fifteen Members of the Madras Legislative Assembly to the Committee of Privileges for the year 1964–65 :—

1. Sri C. Chiranjeevulu Naidu.
2. Sri K. R. Nallasivam.
3. Sri V. R. Nedunchezhiyan.
4. Sri S. Madhavan.
5. Sri S. Murugaiyan.
6. Sri M. V. Karivengadam.
7. Hon. Sri. M. Bhaktavatsalam.
8. Sri K. B. Palani.
9. Sri G. Rajaram.
10. Srimathi T. N. Anandanayaki.
11. Sri S. Nanjunda Rao.
12. Sri R. Subramaniam.
13. Sri R. Ponnappa Nadar.
14. Sri G. Venkataraman.
15. Sri A. Chidambaranatha Nadar.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., *fifteen*, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges for the year 1964–65. The Deputy Speaker is a member ex-officio of the Committee.

31st March 1964] [Mr. Speaker]

Under sub-rule (4) of rule 183 of the Madras Assembly Rules, I nominee Sri K. Parthasarathy to be the Chairman of the Committee.

(3) BILLS PASSED BY THE LEGISLATIVE COUNCIL.

MR. SPEAKER : I have to announce to the House that the following Bills have been passed by the Legislative Council without any recommendation :—

1. The Madras General Sales Tax (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 11 of 1964).

2. The Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 9 of 1964).

3. The Madras Appropriation (No. 3) Bill, 1964 (L.A. Bill No. 18 of 1964).

4. The Madras Appropriation (No. 2) Bill, 1964 (L.A. Bill No. 19 of 1964).

V.—PRESENTATION OF REPORTS.

REPORT OF THE COMMITTE OF PRIVILEGES ON 'BROADWAY TIMES' AND CASES ON 'TAMIL SEITHI.' 9–30 a.m.

SRI K. PARTHASARATHY : Mr. Speaker, Sir, I present the Report of the Committee of Privileges on '*Broadway Times*' Case No. 1.

I present also the Report of the Committee of Privileges on '*Broadway Times*' Case No. 2.

I present also the Report of the Committee of Privileges on '*Tamil Seithi*' case.

(2) REPORT OF THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

SRI K. PARTHASARATHY : Sir, I rise to present the Seventh and Eighth Reports of the Committee on Subordinate Legislation.

(3) REPORT OF THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

SRI A. RAGHAVA REDDI : Mr. Speaker, Sir, on behalf of the Chairman of the Committee on Government Assurances, I present the Fourth Report of the Committee.

VI.—GOVERNMENT MOTION.

(1) FIXATION OF THE MAXIMUM LOAN AMOUNT FOR THE MADRAS STATE ELECTRICITY BOARD.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

"That the proposal of the State Government under sub-section (3) of section 65 of the Electricity (Supply) Act, 1948 (Central Act LIV of 1948), to fix the maximum amount which the Madras State Electricity Board may at any time have on loan under sub-section (1) of the said section as thirty crores of rupees, be approved."

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [31st March 1964

கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு சென்னை ராஜ்ய மின்சார போர்டானது பல புதிய திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப்படாத கோதையாறு திட்டம், மேட்டூர் டண்ணல் ஹைட்ரோ எலக்ட்ரிக் செகண்ட் ஸ்டேஜ் இவைகளை எல்லாம் மேற்கொண்டிருப்பதால் செலவு அதிகமாகிறது. இப்போதுள்ள விதிகளின்படி 20 கோடி அளவிற்குத்தான் அவர்கள் கடன் வாங்க முடியும். அதை 30 கோடியாக உயர்த்தவேண்டுமென்று பிரேரேபிக்கிறேன்.

SRI T. P. ALAGAMUTHU : Mr. Speaker Sir, I move the following amendment :—

"In the motion for the words 'thirty crores of rupees' the words 'twenty-five crores of rupees' be substituted."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The motion and the amendment are before the House for discussion.

* திரு. து. ப. அழகமுத்து : மின்சார போர்ட் 20 கோடி ரூபாய் கடன் எழுப்ப அனுமதி பெற்றிருப்பதில் இருந்து 30 கோடியாக உயர்த்த வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்திற்கு நான் 25 கோடியாக உயர்த்தினால் போதும் என்ற முறையில் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்தத் திருத்தம் கொடுத்ததின் நோக்கம் மின்சார போர்டுக்கு அதிகம் கடன் வாங்கும் வசதிகளை செய்து தரக் கூடாது என்பதற்காக அல்ல. அந்த ஸ்தாபனத்தின் சேவை, அதன் வேலை மிகவும் அவசியமான ஒன்றாகும் என்பதை நான் உணருகிறேன். ஆனால் கடன் எழுப்புகிறபோது அதை வசூல் செய்கிற சமயத்தில் கிராமப் புறத்தில் இருக்கிற ஏழை விவசாயிகள் வற்புறுத்தப்பட்டு அவர்களிடத்திலிருந்து கடன் வசூலிக்கப்படுகிறது. பெரிய வியாபாரிகளிடத்தில் அந்தக் கடன் வசூலிக்கப்படுமானால் அது சௌகரியமாக இருக்கும். ஆனால் கீழேயுள்ள சிறிய விவசாயிகளிடத்தில் இருந்து அவர்களை வற்புறுத்தி வசூலிக்கக் கூடாது என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்வதற்காகத்தான் இந்தத் திருத்தத்தை நான் கொடுத்தேன். மின்சார போர்ட் பொது மக்களிடத்தில் இருந்து கடன் வசூலிக்கிறது. ஆனால் அதே சமயத்தில் தங்களுக்கு தேவையான பொருள்களை வாங்குவதற்கு டெண்டர் கொடுத்துள்ள கண்ட்ராக்டர்களுக்கு இவர்கள் கடன் கொடுக்கிறார்கள். உயர்ந்த வட்டி விகிதத்தில் கடன் வாங்கி குறைந்த வட்டி விகிதத்தில் அவர்களுக்கு கடன் கொடுப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையாக இருக்குமானால், அந்த முறையை பின்பற்றக் கூடாது என்று கூறுவதற்காகவும் நான் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள இத்திருத்தத்தை கொடுத்திருக்கிறேன் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, 25 கோடி ரூபாய் போதாது. 25 கோடி அனுமதித்தால் வேலை எல்லாம் நின்று போய் விடும். இரண்டாவதாக,

31st March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

டெப்பாசிட் வாங்குவதற்கும், கடன் வாங்குவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. எலெக்ட்ரிசிட்டி யார் யாருக்கு கொடுக்கிறார்களோ அவர்களிடமிருந்துதான் டெப்பாசிட் வாங்குகிறார்கள். பொது மக்களிடமிருந்து கடன் அதிகமாக வாங்குகிறபோது தனித் தனியாகப் போய் ஏழை மக்களிடமிருந்து வாங்க முடியாது. அப்படி வாங்கினாலும் ஜாஸ்தி வந்து விடாது. பெரிய கம்பெனி நடத்துகிறவர்கள், ஏராளமாக மின்விசையை உபயோகிக்கிற வர்கள், பொது மக்கள், பாங்குகள், இவர்களிடமிருந்துதான் வசூலிக்கப்படுகிறது. அதனால் ஏழை மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். டென்டர் சம்பந்தமாக சொன்னார்கள். அதுபற்றி விசாரணை செய்வதற்கு இந்த சபைக்கு அதிகாரம் கிடையாது. மின்சார போர்ட் ஒரு ஆட்டானமஸ் பாடி.

The amendment was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

"That the proposal of the State Government under sub-section (3) of section 65 of the Electricity (Supply) Act, 1948 (Central Act LIV of 1948), to fix the maximum amount which the Madras State Electricity Board may at any time have on loan under sub-section (1) of the said section as thirty crores of rupees, be approved."

The motion was put and carried.

(2) REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES (THE 'TAMIL SEITHI CASE).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

"That the report of the Committee of Privileges (The 'Tamil Seithi' Vase) laid on the Table of the House this day (31st March 1964) be approved."

The motion was put and carried.

VII.—AMENDMENT TO THE MADRAS CO-OPERATIVE SOCIETIES RULES, 1963.

* SRI R. S. VEERAPPA CHETTIAR : Mr. Speaker, Sir, I move—

That the following amendments be made to the notification issued in G.O. Ms. No. 4284, Industries, Labour and Co-operation (Co-operation), dated 30th August 1963, containing the Madras Co-operative Societies Rules, 1963 framed under the Madras Co-operative Societies Act, 1961 (Madras Act 53 of 1961), published in the *Fort St. George Gazette*, dated the 4th September 1963, and placed on the Table of the House on 22nd November 1963 :—

[Sri R. S. Veerappa Chettiar] [31st March 1964

AMENDMENTS.

In the Madras Co-operative Societies Rules, 1963, issued in G.O. Ms. No. 4284, Industries, Labour and Co-operation (Co-operation), dated the 30th August 1963,—

(i) In the first proviso to sub-rule (5) of Rule 46 of the Madras Co-operative Societies Rules, 1963, add at the end, the following :—

" or Rs. 900 whichever is less ".

(ii) Delete second proviso.

SRI A. SWAMIDHAS : Sir, I second the amendments.

* **திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்:** கூட்டுறவு விதிகளில் கூட்டுறவு பணியாளர்களுக்கு ஏற்கெனவே போனஸ் கொடுக்க வேண்டுமென்று ஒரு விதி இருக்கிறது. தற்போது வந்துள்ள விதிகளில் 300 ரூபாய்க்கு மேற்பட்டு சம்பளம் வாங்குகிறவர்களுக்கு போனஸ் கொடுக்கக்கூடாது என்று விதியில் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதனுல் அநேக கூட்டுறவு ஸ்தாபனங்களில் போனஸ் கொடுப்பதற்குப் பதிலாக அவர்கள் சம்பளத்தையே உயர்த்தி அதிக நஷ்டத்தை உண்டாக்கும் வகையில் ஏற்பாடு செய்து வருகிருர்கள். ஆகவே இந்த விதியில் மூன்று மாத சம்பளம் அல்லது 900 ரூபாய் இரண்டில் எது குறைவோ அது என்று விதியை மாற்றம் செய்தால் கூட்டுறவு சங்கங்களில் பணம் மீதமாவதோடு எல்லாப் பணியாளர்களுக்கும் அவர்கள் செய்த சேவைக்கு தகுந்த வெகுமதி கிடைக்க வாய்ப்பும் இருக்கும் என்று சொல்லிக் கொண்டு இந்த அமென்ட்மென்டை எல்லோரும் ஒரு முகமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இதை பிரேரேபிக்கிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் கொடுத்துள்ள அமென்ட்மென்ட் இந்த சமயத்தில் தேவை இல்லை என்று எண்ணுகிறேன். இந்த ஆக்டில் நல்ல விவரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல சமீபத்தில் நம் அட்வைசரிக் கமிட்டியில்கூட இதுபற்றி மெம்பர்கள் சொன்னுர்கள். அவற்றை ஆலோசனை செய்து முடிவிற்கு வரவேண்டுமென்று சர்க்கார் இப்போது ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்போது இதை அங்கத்தினர் அவர்கள் வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டு, அதை வாபஸ் பெறும்படி கேட்டுக் கொள்கிறேன். அப்படி வற்புறுத்துவார்கள் என்ருல் அதை நான் எதிர்க்கிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: அமைச்சர் அவர்கள் இந்த விஷயம் ஆலோசனையில் இருந்து வருகிறது என்று சொன்ன காரணத்தினுல் நான் இந்தத் திருத்தங்களை இப்போது வற்புறுத்த வில்லை.

The amendments were by leave withdrawn.

VIII.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS PREVENTION OF BEGGING (AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 4 OF 1964).

MR. SPEAKER : Is the Hon. Minister ready with the names of the Members of the Legislative Assembly to serve on the Joint Select Committee? If so, the Hon. Minister can read out the names.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, the following Members may be selected to serve on the Joint Select Committee :—

1. The Hon. Srimathi Jothi Vencatachellum.
2. Srimathi T. N. Anandanayaki.
3. Kumari D. Sulochana.
4. Sri V. Sankaran.
5. Sri T. Karcha Gowder.
6. Sri K. N. Palanisami Gounder.
7. Sri G. Venkataraman.
8. Sri K. B. Palani.
9. Sri S. Ramalingam.
10. Sri P. Ramachandran.
11. Sri M. Kalyanasundaram.
12. Sri C. Chiranjeevulu Naidu.
13. Sri K. Cheemaichami.
14. Sri V. Krishnamoorthi.
15. Sri S. Muthulingam.
16. Sri Kanchi Manimozhiyar.

MR. SPEAKER : The question is—

" That the concurrence of the Legislative Council be obtained for the setting up a Joint Select Committee of both the Houses, consisting of 24 Members (16 Members of the Legislative Assembly and eight Members of the Legislative Council) to consider the Madras Prevention of Begging (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 4 of 1964) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

1. The Hon. Srimathi Jothi Vencatachellum.
2. Srimathi T. N. Anandanayaki.
3. Kumari D. Sulochana.
4. Sri V. Sankaran.
5. Sri T. Karcha Gowder.
6. Sri K. N. Palanisami Gounder.
7. Sri G. Venkataraman.
8. Sri K. B. Palani.
9. Sri S. Ramalingam.
10. Sri P. Ramachandran.
11. Sri M. Kalyanasundaram.
12. Sri C. Chiranjeevulu Naidu.

13. Sri K. Cheemaichami.
14. Sri V. Krishnamoorthi.
15. Sri S. Muthulingam.
16. Sri Kanchi Manimozhiar.''

The motion was put and carried.

(2) The Land Improvement Loans (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 8 of 1964).

* **The Hon. Sri R. VENKATARAMAN** : Sir, on behalf of the Hon. Minister for Works, I move—

'' That the Land Improvement Loans (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 8 of 1964) be taken into consideration.''

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது இருக்கின்ற லான்ட் மார்ட்கேஜ் சட்டப்படி கடன்களை லான்ட் மார்ட்கேஜ் பாங்க் கொடுத்தால், முதல் சார்ஜ் உண்டு என்று சட்டம் இருக்கிறது. அதே போன்று லான்ட் இம்ப்ரூவ்மென்ட் சட்டத்தின்கீழும் அதாவது 1883-வது வருஷத்தில் இயற்றப்பட்ட சட்டப்படி, கடன் கொடுத்தால் சர்க்காருக்கு முதல் சார்ஜ், அதாவது முதல் பிரையாரிட்டி*

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இருக்கிறது. இதனால் லான்ட் மார்ட்கேஜ் பாங்க் கடன் கொடுத்த பின்னும், லாண்ட் இம்ப்ரூவ்மெண்ட் பிரகாரம் கடன் கொடுத்திருந்தால் சர்க்காருக்கு முதலிடம் இருந்தது, அதன் பின்னல் கோவாப்ரேட்டீவ் பாங்க்-க்கு இரண்டாவது இடம் போய்விடுகிறது. லான்ட் இம்ரூவ்மென்ட் ஆக்ட் பிரகாரம் கடன் கொடுத்தால், அந்தக் கடன், லான்ட் மாட்கேஜ் பாங்க் கொடுக்கின்ற கடனுக்கு பின் தங்கியதாக இருக்கும் என்கின்ற திருத்தத்தை இப்போது கொடுத்திருக்கிறோம். அதேபோன்று கூட்டுறவு சங்கங்களிலும் அடமானம் மாதிரி வைத்து கடன்கொடுத்திருந்தால், அதாவது அவர்களுடைய நிலம் அல்லது ஸ்தாவர சொத்துக்கள் இவைகளின்மீது கடன் கொடுத்திருந்தால், அந்த சொத்துக்களின் மீது லான்ட் இம்ப்ரூவ்மென்ட் ஆக்ட் பிரகாரம் கடன் கொடுத்திருந்தாலும் கூட்டுறவு சங்கங்களுக்கு முதல் சார்ஜ் இருக்கும் என்ற சட்டத்தையும் இதன் மூலம் இப்போது கொண்டு வரப் பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : *கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நில திருத்த சட்டத்தின்கீழ் கடன் கொடுக்கப்பட்டிருந்தாலும், கூட்டுறவு சங்கங்களிலிருந்து கடன் கொடுக்கப்பட்டிருந்தாலும், கூட்டுறவு சங்கங்களுக்கு முதலிடம் கொடுத்து வசூலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதல் முதலாக நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் கடன் கொடுத்து விட்டு பின்னல் கூட்டுறவு சங்கம் கடன் கொடுத்திருந்தால், எந்தக் கடன் முதலாவது வசூலிக்கப்படும் என்பதை அமைச்சர் விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

31st March 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லான்ட் இம்ரூவ்மெண்ட் ஆக்ட்டின் பிரகாரம் முதலாவது கடன் கொடுத்திருந்தால், அவர்களுக்கு பிரையாரிட்டி இருக்கும். லான்ட் மார்ட்கேஜ் பாங்க் முதலாவது கொடுத்திருந்தால் அவர்களுக்கு பிரையாரிட்டி இருக்கும்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Land Improvement Loans (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 8 of 1964) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That clause 2 do stand part of the Bill."

SRI M. V. KARIVENGADAM : Sir, I move the following amendment :—

Number the existing amendment at item (i) and add the following as item (ii) :—

"After sub-section (2) of section 7 of the principal Act, add the following as new sub-section (3) and the existing sub-section (3) be re-numbered as sub-section (4) :

'(3) Loans either in the Land Mortgage Banks under the Madras Co-operative Land Mortgage Banks Act, 1943 or in the Co-operative Societies under Co-operative Societies Act, 1961 or in both shall not be a bar to grant of loan under this Act, provided the hypothecation of either the borrower to the person who furnishes collateral security affords sufficient security to the loan granted'."

SRI N. P. SENGOTTUVELU : Sir, I second the amendment.

MR. DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

The hon. Member Sri M. V. Karivengadam may now speak.

திரு. எம். வி. கரிவேங்கடம் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தின்மீது என் கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். 1934-வது ஆண்டு கூட்டுறவு நில அடமான சட்டத்தின் செக்ஷன் 28-ன்படி கூட்டுறவு பாங்குகள் விவசாயிகளுக்கு கடன் கொடுத்தால் அதற்கு பிரையாரிட்டி கிளைம் இருந்தது. 1961-வது வருஷத்திய கூட்டுறவு சங்க சட்டத்தின் செக்ஷன் 32 உட்பிரிவு 5-ன்படி முதல் சார்ஜாக அந்த கடன் இருந்து வந்தது. அதே சந்தர்ப்பத்தில் லான்ட் இம்ப்ரூவ்மென்ட் ஆக்ட் செக்ஷன் 7, பிரிவு 2-ன்படி கடன் கொடுக்கப்பட்டிருந்தால் அதற்கும் முதல் சார்ஜ் இருந்து

வந்தது. இப்படி ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் இருந்த தினல் இந்தத் திருத்தம் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை காரணமாக சொல்லப்பட்டிருக்கிறது. இது நிச்சயமாக நீக்கப்படவேண்டியதொன்றுதான். இருந்தாலும் நமது நில அபிவிருத்திச் சட்டப்படி கடன் கொடுக்கப்பட்டிருந்தால் அதற்கு முதல் சார்ஜ் உடையதாக இதுவரை சட்டம் இருந்து வந்தது. ஆகவே கடன் கொடுக்கின்ற இந்த இலாகா, இதற்கு முதல் பொறுப்பாக இருக்கிறது என்று எண்ணி கடனை தாராளமாக கொடுத்துவந்தார்கள். அதே நேரத்தில் நில அடமான பாங்கிலும் கடன் இருக்கும். வேறு கூட்டுறவு சங்கங்களிலும் கடன் இருக்கும். இதுவரை இருந்த நிலைமை என்னவென்முல், கூட்டுறவு சங்கங்களில் அல்லது நில அடமான பாங்க்களில் கடன்கள் இருந்தாலும், நில அபிவிருத்திச் சட்டத்தின்மூலம் கொடுக்கப்படுகிற கடனுக்கு முதல் சார்ஜ் இருக்கும் என்ற எண்ணத்தில் விவசாயிகளுக்கு தாராளமாக கடன் கொடுத்து வந்தார்கள். அவர்கள் ஏற்கனவே வாங்கியிருக்கும் கடன்களைப் பற்றி அக்கரை செலுத்த மாட்டார்கள். இப்போது இந்தத் திருத்தம் வந்திருக்கின்ற காரணத்தினல், நில அபிவிருத்தி சட்டத்தின்படி கடன் கொடுத்திருந்தாலும், மற்ற லான்ட் மார்ட் கெஜ் பாங்க் சட்டப்படி கடன் வாங்கியிருந்தாலும்சரி, அல்லது கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கியிருந்தாலும்சரி, அதற்கு முதல் சார்ஜ் இருக்கும் என்கின்ற நிலைமை ஏற்படுகிறது. இதன் படி கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கிவிட்டு, பின்னுல் நில அபிவிருத்திச் சட்டப்படி விவசாயி கடன் வாங்கப்போனுலும் முதல் சார்ஜ் யாருக்குப் போகும் என்கின்ற சந்தேகம் ஏற்படும். இவ்விதம் சந்தேகம் ஏற்பட்ட உடன், ஏற்கெனவே கடன் இருக் கிறது. இதற்குத்தான் முதல் சார்ஜ் இருக்கும், ஆகவே கடன் கொடுப்பதில்லை என்று நில அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் கடன் கேட்கின்ற விண்ணப்பங்கள் தள்ளுபடியாகிப்போய் விடும். கொடுக்கின்ற கடனுக்கு செக்யூரிட்டி வேண்டாமா என்று அமைச்சர் அவர்கள் கேட்பார்கள். அதற்குத் தகுந்த முறையில் நான் திருத்தமும் கொடுத்திருக்கிறேன். கூட்டுறவு சங்கங்களின் மூலமாக கடன் வாங்கியிருந்தாலும் சரி, லான்ட் மார்ட்கேஜ் பாங்க் மூலம் கடன் வாங்கியிருந்தாலும் சரி, இவைகளில் கடன் வாங்கி யிருப்பதன் காரணமாக, நில அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் கடன் கொடுப்பது மறுக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும். அதே நேரத்தில் அரசாங்கம் கொடுக்கின்ற கடனுக்கும் பாதுகாப்பு இருக்கவேண்டும் என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். சந்தேகங்கள் எழுகின்ற நேரத்தில் இன்னின்ன விதத்தில் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்பட வேண்டும் என்பதை சட்டத்தில் அமைத்துவிட்டால் நல்லது. சட்டத்தில் இந்தத் தலைப்பின் கீழ் விவசாயிகளுக்கு கடன் இல்லை என்று சொல்லாமல் இருக்கின்ற நிலைமைக்கு தகுந்தபடி திருத்தங் கள் கொடுத்திருக்கிறேன். இந்த முறையில் இரண்டு பாங்குகளின் கீழ் கடன் கொடுத்திருந்தாலும், நில அபிவிருத்தி சட்டத்தின்

31st March 1964] *[திரு. எம். வி. கரிவேங்கடம்]*

கீழும் கடன் வழங்கலாம். நில அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் கடன் கேட்பவர்களுக்கு செக்யூரிட்டி கொடுக்கின்ற வகையில், சொத்து மதிப்புடையவர்கள் செக்யூரிட்டி கொடுக்க முன் வந்தால் இதன்கீழ் தாராளமாக இந்தச் சட்டத்தின் வாயிலாக கடன் கொடுக்கலாம் என்கின்ற திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

ஆகவே விவசாயிகளுக்கு அனுவசியமாக ஏற்படுகிற தொல்லைகளை நீக்குகிற அளவுக்கு, இலாகாக்களில் இருக்கிறவர்களுக்கு ஏற்படுகிற சந்தேகங்களைப் போக்குகிற அளவுக்கு இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, the amendment is not necessary. Under the rule, as it now exists, Rule XI of the Madras Land Improvement and Agriculturists Loans General Rules, 1933, no loan shall be granted unless the value of the security offered is at least twice the amount of the loan applied for. Loan can be granted to any individual, if the security offered is sufficient as prescribed. If the security offered for the loan is considered sufficient taking into consideration the amount of loan already obtained by the individual on the same property offered as security, loan can be granted. Of course, the bar should be removed. But this should not be by an amendment.

The amendment was by leave withdrawn.

Clause 2 was put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Land Improvement Loans (Madras Amendment) Bill, 1964, (L.A. Bill No. 8 of 1964) be passed.

திரு. ப. உ. சண்முகம் : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தத்திற்காக என்று தனிச் சட்டம் வைத்து கடன் கொடுக்கிறார்கள். அதே நேரத்தில் நிலத்தை அடமானத்திற்கு வைக்கிறபோது நிலத்தை சீர்திருத்துவதாக இருந்தால்தான் நில அடமான பாங்கில் பணம் கடனாகக் கொடுக்கிறார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் நிலத்தை சீர்திருத்துவதற்காக தனிக் கடன் கொடுக்கும் நேரத்தில் நில அடமான பாங்கிலும் நிலத்தைச் சீர்திருத்துவதற்காகத்தான் கடன் என்று சொல்லும் போது ஒரே வேலைக்கு என்று இரண்டு இடத்திலும் வற்புறுத்துவது பொருத்தம் உடையதுதானா என்று அமைச்சர் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்குகிறவர்கள் குடும்பத்தில் இருக்கிற கடனைத் தீர்க்க நில அடமான பாங்க் மூலமாகக் கடன் வாங்குகிறார்கள். குடும்பக் கடனைத் தீர்ப்பதற்காக வாங்கும்போதுகூட, வாங்கக்கூடிய கடனில் 60 சதவீதத்தை நிலத்தைச் சீர்திருத்துவதற்காக

உபயோகப்படுத்த வேண்டும் என்றும், 40 சதவீதத்தை குடும்பக் கடனைத் தீர்ப்பதற்கு உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் இருக்கிறது. நிலச் சீர்திருத்தத்திற்கு என்று தனிச் சட்டம் வைத்து விட்டு, நில அடமான கூட்டுறவு சங்கம் கொடுக்கும் கடனை சீர்திருத்தம் செய்வதற்காகத்தான் கொடுப்போம் என்பது முறைதானா என்பதை யோசித்து அதற்கு ஒரு நல்ல உத்திரவைப் பிறப்பிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, லாண்ட் மார்க்கேட்ஜ் பாங்கிலே 60 சத விகிதம் இம்ப்ரூவ்மெண்ட்டுக்கும் 40 சத விகிதம் கடனைத் திருப்பிக் கொடுப்பதெற்கென்றும் போட்ட விதியானது பணம் ப்ரொடக்ட்டிவ் எண்டெர்ப்ரைஸிலே உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்று தான். ஏனென்றால் பலர் பழைய கடனைத் திருப்பிக் கொடுக்க என்று ஏராள கடனை வாங்கி விட்டு திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருந்து விடுகிறார்கள். ஆகையால் கொடுத்த பணம்கூட பயனற்றுப் போய் விடுகிறது. ஆகையால்தான் சமீப காலத்தில் மீண்டும் பரிசீலனை செய்து கடனில் ஒரு தொகை இம்ப்ரூவ்மெண்ட் செய்வதற்காக இருக்க வேண்டும், ஒரு பகுதிதான் பழைய கடனைக் கொடுப்பதற்காக இருக்க வேண்டும் என்று செய்யப்பட்டது. ஆனால் இப்போது கொண்டுவந்திருக்கிற சட்டத்தினால் ஒன்றும் நஷ்டம் இல்லை. லாண்ட் மார்ட்கேஜ் பாங்கிலிருந்தும் பணம் கடன் வாங்கலாம். செக்யூரிட்டி போதுமானதாக இருந்தால் லாண்ட் இம்ப்ரூவ்மென்ட் ஆக்டின்கீழ் வாங்கலாம். பத்து ஆயிரம் ரூபாய் வாங்குவதாக இருந்தால் 6,000 ரூபாய் இம்ப்ரூவ் மெண்டுக்கும், 4,000 ரூபாய் கடனைத் திருப்பிக் கொடுக்கவும் வாங்கவும் முடியும். இல்லையென்றால் இரண்டு வித லோன்களை, இம்ப்ரூவ்மெண்ட் ஆக்ட் பிரகாரம் இம்ப்ரூவ்மெண்ட்டுக்கு வேண்டிய கடனை வாங்கிக்கொண்டு, எந்த அளவுக்கு பழைய கடனைத் திருப்பி கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு மாத்திரம் லாண்ட் மார்ட்கேஜ் பாங்கில் வாங்கிக்கொள்ள முடியும். இப்போது கொண்டு வந்திருக்கின்ற சட்டத்தில் இரண்டு விதக் கடன்கள் கொடுக்க முடியுமே தவிர இருக்கிற வசதி குறைந்து விடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Land Improvements Loans (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 8 of 1964) be passed." The motion was put and carried and the Bill was passed

(3) THE MADRAS BHOODAN YAGNA (AMENDMENT) BILL, 1964.

(L.A BILL NO. 10 OF 1964)

THE HON. SRI P. KAKKAN : Sir, I move—

that the Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 10 of 1964) be taken into consideration.'

31st March 1964] [திரு. பூ. கக்கன்]

ஸ்ரீ ஆச்சாரிய விநோபா பாவே அவர்கள் ஆரம்பித்து வைத்த மாபெரும் இயக்கமான பூதான் யக்ஞத்தைப் பற்றி இந்த சபை நன்கு அறியும். அந்த மகான் அளித்த உணர்ச்சி வேகம் காரணமாக, புதிய சமூக அமைப்பை உருவாக்கும் நோக்கத்தோடு கிராமாந்திரப் பிரதேசங்களில் ஆரவாரமற்ற, அற்புத புரட்சி தொடங்கப்பட்டது. புனிதர் விநோபாஜி ஆரம்பித்த பூதான யக்ஞத்துக்கு தானமாக நிலங்களைக் கொடுப்பதற்கு வசதி செய்யவும், அவ்வாறு தானமாகக் கிடைத்த நிலங்களை, நிலமில்லாத ஏழை ஜனங்களின் நல்வாழ்விற்காகவும், சமுதாய நன்மைக்காகவும், பகிர்ந்தளிக்கவும், மாற்றிக்கொடுக்கவும், கிராமதான ஊர்களில் உள்ள நிலங்களைத் தமிழ்நாட்டிலுள்ள சர்வோதய பஞ்சாயத்திடம் ஒப்படைக்கவும், அதன் மூலம் நிர்வகிக்கவும், தக்க ஏற்பாடுகள் செய்யும் வகையில், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பூதான யக்ஞ சட்டம் (1958-ம் ஆண்டு சென்னை 15-வது சட்டம்) இந்த சபையில் நிறைவேறியதை இங்குள்ளவர்கள் அறிவார்கள். மேற்சொன்ன சட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட சில குறைகளையும், அனுபவத்தில் கண்ட கஷ்டங்களையும் நீக்குவதற்காக, சில வகைகளில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

1948-ம் ஆண்டு தமிழ்நாடு பூதான யக்ஞ சட்டத்தின்படி, மாநில போர்டுக்கு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களை நிலமில்லாத ஏழை ஜனங்களுக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ, அல்லது ஒரு ஸ்தல ஸ்தாபனத்துக்கோ, சமுதாய நலங்களுக்காக அளிக்கும் அதிகாரம் இருக்கிறது. பூமிதான நிலங்களைப் பெற்றவர், இது சம்பந்தமாக அரசாங்கம் உருவாக்கியுள்ள விதிகளின்படி அமைந்த நிபந்தனைகள், கட்டுப்பாடுகள், வரையறைகள் முதலிய வற்றுக்கு உட்பட்ட உரிமைகளை மட்டுமே அடைய முடியும். பூதான நிலங்களைப் பெற்றவர்கள் ஒன்று சேர்ந்து, கூட்டு முறையில் சாகுபடி செய்வதற்கான வசதியளிக்க வேண்டியது அவசியம் என்று கருதப்படுகிறது. இதற்காக, பூதான நிலங்களைப் பெற்றவர்கள் அங்கத்தினர்களாக இருக்கும் கூட்டுறவு சங்கங்களை உருவாக்கவும், அவற்றின் மூலம் கூட்டுச் சாகுபடி செய்யவும் வழி அமைக்க வேண்டியுள்ளது. எனவே, கூட்டுறவு சங்கங்களுக்கும் பூதான நிலங்களை அளிக்கும் அதிகாரம் மாநில போர்டுக்குத் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்போதுள்ள சட்டத்தின் 2 (இ) பிரிவில், 'கிராம தான ஊர்' என்பதற்குப் பொருள் வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது எந்த ஒரு ரெவின்யூ கிராமத்தில் அல்லது அதன் ஒரு பகுதியில் நிலம் படைத்த நபர்களின் எண்ணிக்கையிலே மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதவர்கள், தம்முடைய எல்லா நிலங்களையும் தானமாகக் கொடுத்திருந்தாலும், அப்படி தானமாகக் கொடுக்கப்பட்ட நிலத்தின் பரப்பு, அந்த கிராமத்து நிலங்களின் மொத்த பரப்பில் பாதிக்குக் குறையாமல் அதிகமாக இருந்தாலும் அத்தகைய ஊரின் பெயர் வெளியிடப்பட்டு அரசாங்கத்தாரால் அறிவிப்பு (நோட்டிஃபிகேஷன்) செய்த பின்பு 'கிராம தான

ஊர்' எனப்படும். மேலே சொன்ன பொருள் விளக்கத்தின்படி பார்த்தால், ஒரு சேர அமைந்துள்ள கிராமதான ஊர்கள் சில வற்றை அறிவிப்பு செய்ய முடியவில்லை ஏனெனில், அந்தக் கிரா மங்களில் பூதானம் செய்யும் நபர்களின் எண்ணிக்கை தானமாகப் பெறும் நிலங்களின் பரப்பு ஆகியவைமுன் சொன்ன சட்டத்தின் பொருள் விளக்கத்துக்கு பொருந்துவதாக இல்லாததால் தொல்லை ஏற்பட்டுள்ளது.

10–00 a.m. இதற்கேற்ற முறையில், "கிராம தான ஊர்" என்பதன் பொருள் விளக்கம் தக்க வகையில் திருத்தப்படும்.

கிராம தான ஊர்களில், பூதான யக்ஞத்துக்காக வழங்கப்பட்ட நிலங்கள் உள்ள நிலமில்லாத ஏழை மக்களுக்கு ஏற்கனவே கொடுத்துவிட்டதாகவும், மேலும் வழங்கப்பட வேண்டிய நிலங்கள் இன்னும் இருப்பதாகவும், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கிராமதான ஊர்களில் உள்ள பூதான நிலங்களை அத்தகைய நிலங்களின் மேலும் நல்ல உபயோ கத்திற்காக நிலமில்லாத ஏழை ஜனங்களுக்கு இதுவரையில் கொடுக்காத நிலங்களை, அந்த ஊரில் நிறுவப்பட்டுள்ள சர்வோதய பஞ்சாயத்துக்கு வழங்க வேண்டுமென்று தோன்றியது. அதற்கு ஏற்றபடி, சட்டத்தைத் திருத்தி, பூதான நிலங்களை, கிராம தான ஊர்களில் உள்ள சர்வோதய பஞ்சாயத்துக்களுக்கு வழங்கும் அதிகாரத்தை மாநில போர்டுக்குத் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்போதுள்ள சட்டப்படி, தானம் கொடுப்பவர், அந்த தாலுகாவின் தாசில்தாரிடம், உறுதிமொழியை தாக்கல் செய்ய வேண்டும் (Declaration has to be filed).

அதற்குப்பின், அது பற்றிய "அறிவிப்பு" செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை, அதற் கென உள்ள முறைப்படி, தாசில்தார் செய்வார். அதாவது அறி விப்பு செய்வதால், பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து ஏதாவது ஆட் சேபணைகள் உண்டா என்பதை விசாரித்து அறிந்து கொண்ட பின்பு, தாசில்தார் உறுதிமொழியை (Declaration) காயம் (Confirm) செய்வார் அல்லது செல்லுபடியாகாது என்று ரத்து செய்வார். உறுதிமொழியை காயமாகச் செய்து, தாசில் தார் பிறப்பிக்கும் உத்தரவு, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட் டில் வெளியிடப்படும். இது சம்பந்தமான நடைமுறை தஸ்தா வேஜுகள், தாசில்தாரே வைத்திருப்பார். மேற்சொன்ன முறையை ஒரு சிறிது மாற்றி பின்வருமாறு அமைக்க உத்தேசிக்கப்பட் டுள்ளது. இப்போது கொண்டு வரப்பட்டுள்ள திருத்தங்களின்படி, உறுதிமொழிகளை மாநில போர்டில், தாக்கல் செய்ய வேண்டும், செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் நியமித்த முறையில், அவற்றை, மாநில போர்டு வெளியிடும். அதற்கு பின்பு, அந்த உறுதிமொழிகள், அந்தந்த விசாரணை அதிகாரிக்கு (Inquiry Officer) அனுப்பப்படும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஆட்சேபனைகள் எதுவும் வராவிட்டால், விசாரணை அதிகாரி, உறுதி மொழியை, காயம் செய்வார். ஆட்சேபணைகள் வரப்பெற்றால்,

31st March 1964] [திரு. பூ. கக்கன்]

அவற்றை கேட்டபின்பு, உறுதிமொழியைக் காயம் செய்யலாம். அல்லது செல்லுபடியாகாதென்று தள்ளிவிடலாம். உறுதிமொழியைக் காயம் செய்யும்போது, விசாரணை அதிகாரியின் உத்தரவின் நகல் ஒன்று அந்த விஷயத்தைப் பற்றிய நடவடிக்கை தஸ்தாவேஜுகளுடன், மாநில போர்டுக்கு அனுப்பப்பட வேண்டும். மாநில போர்டு, அந்த உத்தரவை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் வெளியிடும். விசாரணை அதிகாரி எடுக்கும் நடவடிக்கைகள் பூர்த்தியாகாமல் இருக்கும் காலத்திலும், பூதான யக்ஞத்துக்கென வழங்கப்பட்ட நிலங்களைச் சாகுபடி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள, மாநில போர்டுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

இப்போதுள்ள சட்டப்படி, நிலங்களை தானம் செய்து அதைப்பற்றி உறுதிமொழி தருவது, முதலிய தஸ்தாவேஜுகளுக்கு, ஸ்டாம்பு கட்டணம் செலுத்துதல், வில்லங்க அத்தாட்சி **(Encumbrance Certificate)** அளிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் மதுரை மாவட்ட நீதிபதி **(District Judge of Madurai)** அளித்த ஏ. எஸ். நெம்பர் 115/62 என்ற தீர்ப்பில், 1882-ம் ஆண்டு சொத்துக்கள் மாற்றம் பற்றிய சட்டத்திலும் **(Transfer of Property Act** 1882) 1908-ம் ஆண்டு இந்தியப் பதிவுச் சட்டத்திலும் **(Indian Registration Act,** 1908) சொல்லப்பட்டுள்ளதற்கேற்ப, நில தானங்கள் பற்றிய பத்திரங்கள் பதிவு செய்யப்படவில்லை என்ற காரணத்துக்காக பூதான யக்ஞத்துக்கு வழங்கப்பட்ட நிலதானங்கள் சில செல்லுபடியாகாமல் போய்விட்டன. எனவே, ஸ்டாம்பு கட்டணம் செலுத்துவதிலிருந்து மட்டுமின்றி, "பதிவு செய்ய வேண்டிய அவசியமே" என்பதிலிருந்தும் விதிவிலக்கு தந்து, சட்டத்தைத் திருத்த எண்ணியுள்ளோம். சட்டப்படி பத்திரங்கள் பதிவு செய்யப்படாத காரணத்தால், செல்லுபடியாகாமல் போன உறுதிமொழிப் பத்திரங்கள் செல்லத்தக்கனவாகச் செய்யவும், உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ற வகையில், சட்டத்தின் விதிமுறைகள் தக்க முறையில் மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

துணைச்சட்ட அமைப்புக் குழுவின் **(Committee on Sub-ordinate Legislation** சிபாரிசுக்கிணங்க இப்போதுள்ள சட்டத்தின் 28-வது பிரிவு திருத்தியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இந்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் எல்லா விதிகளும், செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் வெளியிட ஏற்பாடு செய்யப்படும். அத்துடன் இந்தச் சட்டத்தின்படி, அரசாங்கம் வகுக்கும் விதிகள் உத்தரவுகள், அறிவிப்புகள் அனைத்தும், சட்டப்பேரவையில் இருசபைகளிலும் சமர்ப்பிக்கப்படும்.

மசோதாவின் முக்கிய அம்சங்களை, சுருக்கமாகக் குறிப்பிட்டேன். இந்த மசோதாவின் "நோக்கங்கள், காரணங்கள் பற்றிய அறிக்கையில்" இதன் நோக்கத்தைப் பற்றி விரிவாகக் காணலாம். இந்த தீர்மானத்தை இந்த சபை அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 10 of 1964) be taken into consideration."

திரு. வை சங்கரன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பொதுவாக இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்த சட்டமானது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டால் நடைமுறையில் இருக்கும் ஒரு சில கஷ்டங்கள் நிவர்த்தியாகும் என்பது உண்மை தான். அதிலே முக்கியமாக நாம் மூன்றுவிதத் திருத்தங்களைப் பார்க்க முடிகிறது. ஒன்று கிராம தான வில்லேஜ் பற்றிய விளக்க, வியாக்யானம். அதற்கென்று தனியாக என்க்வயரி ஆபீசர் போடப்படுகிறது. முன்பு தாசில்தார் டெபுடி தாசில்தாரிடம் இருந்த பொறுப்பு இப்போது தனியாக ஒருவரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

இன்னொரு முக்கியமான திருத்தம் ஒரு சப்ளிமெண்டரி ப்ரொவிஷன் (Validation of donation and grant of Land) என்பதாக கனம் முதல் மூன்றுவிதமான திருத்தங்களை நாம் காண்கிறோம். என்க்வயரி ஆபீசர் போடுவது பற்றி எவ்வித ஆட்சேபணையும் இல்லை. அது பார்மல் திருத்தம்தான்.

கிராம தான வில்லேஜ் என்பதற்கான வியாக்கியானத்தை ஏன் மாற்றினார்கள் என்பது தான் தெரியவில்லை. இதைப் பாராட்ட முடியவில்லை. குறிப்பாக முன்னால் இருந்தபடி கிராமதான வில்லேஜ் என்றால்

"'Gramdan Village' means any revenue village or part thereof in whcih not less than two-thirds of the member of persons owning lands donate all their lands for Gramdan and

என்று இருந்தது. இப்போது 'and' என்பதை எடுத்துவிட்டு or என்று போட்டு இருக்கிறார்கள். அதாவது கிராமதான வில்லேஜ் என்றால் மூன்றில் இரண்டு பாகம் உள்ளவர்கள் கொடுத்து இருக்கவேண்டும், அதோடு கிராமத்தில் உள்ள மொத்த நிலத்தில் இவ்வளவு பாகத்திற்கு மேல் இருக்கவேண்டும் என்று இரண்டு கண்டிஷன் இருந்தது. இப்போது அப்படி இல்லை. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். ஒரு கிராமத்தில் பத்து பேர் இருக்கிறார்கள். அந்த கிராமத்தில் மொத்தம் நூறு ஏக்கர் நிலம். அதில் எண்பது ஏக்கர் நிலம் இரண்டு பெரும் புள்ளிகளிடம் இருக்கிறது. பாக்கியுள்ள இருபது ஏக்கர் நிலம் எட்டுப் பேர்களிடம் இருக்கிறது. இந்த எட்டுப் பேர்களும் 20 ஏக்கர் நிலத்தைக் கொடுக்க முன்வந்துவிட்டால் கிராமத்தில் உள்ள அதிகமானபேர்கள் கொடுத்துவிட்டார்கள் என்பதற்காக அது கிராம தான் வில்லேஜ் என்று ஆகிவிடுமா? இந்தத் திருத்தத்தின் படி "அண்டு" என்பதை எடுத்துவிட்டு "ஆர்" என்று போட்டால் நிலைமை அப்படித்தான் ஆகும்? ஆகவே இதுபற்றியும் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

31st March 1964] *[திரு. வை. சங்கரன்]*

இரண்டாவதாக அந்த கிராமத்திலேயே ரெசிடெண்ட்டாக இருக்கவேண்டும் என்ருல் ஒருவர் அந்த கிராமத்தில் ரிசைட் பண்ணுமல் இருக்கலாம். அந்த கிராமத்தில் வசிக்கிறவர்கள் மூன்றில் இரண்டு பாகம் இருக்கலாம்.

" Not less than two-thirds of the number of persons residing and owning lands ".

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொது விவாதத்தில் கனம் அங்கத்தினர் பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசலாம். ஷரத்து வாரியாக வருகிறபோது அந்த அந்த ஷரத்து சம்பந்தப் பட்ட திருத்தங்களைப் பற்றிப் பேசினுல் பதிலளிக்க வசதியாக இருக்கும்.

திரு. வை. சங்கரன் : பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசினுல் நல்லது என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். பொதுவாகச் சொன்னுல் பழையபடியே இருந்தால் நன்ருக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். அதிலே பொதுப்படையாகச் சொல்ல நினைக்கிறேன். ரிஜிஸ்டர் பீ, ஸ்டாம் பீ வேண்டியது இல்லை என்று இருந்தது. இப்போதும் ரிஜிஸ்டர் பீ வேண்டியது இல்லை என்று போட்டு இருக்கிருர்கள். கனம் மந்திரி சொன்னது போல வில்லேஜ் என்று நிர்ணயிப்பதில் தான் யோசனை செய்யவேண்டும். ' காமன் லா அப்ளிகபிள் " இல்லை, 'பண்டமண்டல் பிரன்ஸிபில்ஸ்' 'அப்ளிகபிள்' இல்லை என்று சொல்லுவது அவ்வளவு நல்லதா என்று பார்க்கவேண்டும். 'ஸ்டாம்பு டியூடி', 'ரிஜிஸ்டிரேஷன் டியூடி' ஆகியவைகளிலிருந்து வேண்டுமானுல் 'எக்ஸெம்ப்ட்' செய்யலாம். ஆனுல் 'ரிஜிஸ்டி ரேஷனே' வேண்டாம், 'ப்ரொவிஷன்ஸ் ஆப் டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட்' 'அப்ளிகபிள்' இல்லை 'காமன் லா' 'அப்ளிகபிள்' இல்லை என்று ஒரு சட்டம் போட்டால் அது எவ்வளவு தூரம் பொருத்தமாக இருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும்.

" No provision of the Transfer of Property Act or Registration Act will be applicable to invalidate the Act and all deemed to be valid as against any provision of the Transfer of Property Act and Registration Act.

என்ற முறையில் போட்டிருக்கிறது. 'ரிஜிஸ்டிரேஷன் பீ' வேண்டாம் என்று வேண்டுமானுல் சொல்லலாம். ஆனுல் 'ரிஜிஸ்டி ரேஷனே' வேண்டாம் என்று சொல்லுவது நல்லதா? 'ரிஜிஸ்டி ரேஷன்'-செய்வதின் முக்கியமான நோக்கம் அது ஒரு 'நோடீஸ்' மாதிரி கொடுக்கிற "டோனர்கள்' எல்லோரும் நல்லவர்கள் என்று சொல்ல முடியாது. 'ரிஜிஸ்டிரேஷனின்' முக்கியத்துவம் என்னவென்று சொன்னுல், பின்னுல் வாங்குகிறவர்களுக்கு அது ஒரு நோட்டீஸ் மாதிரி, ஏதோ ஒரு பேப்பரில் எழுதிக்கொடுத்து விட்டு, அவர் மூன்ருவது நபருக்கு விற்றுவிட்டால் யாருக்கு 'ரைட்' வரும். 'ரிஜிஸ்டிரேஷன்' என்பது **'It is a notice to the outside World** ரிஜிஸ்டிரேஷன் இல்லாமல் எழுதிக்கொடுத்துவிட்டு, ஒருவர்

மூன்றுவது நபருக்கு விற்றுவிட்டால், பணம் கொடுத்து வாங்கிய வர்பாடு திண்டாட்டமாகப் போய்விடும். 'காமன் லாவில்' உள்ள 'ஜெனரல் பிரின்ஸிபிள்ஸ்', 'பண்டமண்டல் பிரின்ஸிபிள்ஸ்' 'அப்ளிகபிள்' இல்லே, 'ப்ரொவிஷன்ஸ் ஆப் டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட்' 'அப்ளிகபிள்' இல்லே, 'ரிஜிஸ்டிரேஷனே' வேண்டாம் என்று சொல்லுவது எவ்வளவு தூரம் நல்லது என்று பார்க்கவேண்டும். 'டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்டில்' பல செக்ஷன்கள் இருக்கின்றன. பின்னுலே திருத்தங்கள் வரும் பொழுது விவரமாகக் கூறுகிறேன். 123 செக்ஷன் படி **Transferred by registration and also to be attested by two Witnesses** இரண்டு 'விட்னஸ்' 'அடெஸ்டேஷனுக்கு' 'நெஸஸரி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 'பர்டிகுலர் செக்ஷன்' வேண்டு மானுல் அவசியமில்லே என்று சொல்லலாம். இரண்டு 'விட்னஸ்' 'அடெஸ்டேஷனுக்கு' வேண்டாம் என்று சொல்லலாம். ஆனுல், 'டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட்', ஜெனரல் பிரின்ஸிபில்ஸ்' 'பண்டமெண்டல் பிரின்ஸிபில்ஸ்' 'ஸ்லிப்பிங்'-ஆக 'அப்ளிகபிள்' இல்லே என்று சொன்னுல், அது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று நினைக்கிறேன்.

* SRI S. NANJUNDA ROW : Mr. Deputy Speaker, Sir, I rise to support the amending Bill now before the House. It is a very welcome Bill. The Bhoodan Movement, as all of us know and as the House knows, has brought about a peaceful and social revolution in this country. The Community Development Project which we are executing through the Government is also intended to bring about a social revolution. But there is a lot of difference in what the Community Development Project and the Gramdhan Movement are doing. The Gramdhan Movement is trying to bring about community development in the rural areas and it is based on the Sarvodhaya principles. The Sarvodhaya Movement, as all of us know, is based on the Gandhian and Vinobhajee's ideaologies and this Gramdhan movement is supported by a people's movement. It is a people's co-operative movement and what is meant by the Gramdhan Movement is nothing but a real co-operative movement. So, the House should go out of the way to support this real Gandhian and peaceful movement and the Co-operative Department also should go out of the way to support it. Of course, this is not connected with the Bill, but I am only making a general request that the House should go out of the way to support this movement. I think what we find in the Gramdhan Movement may well be copied by the Community Development Organisation and I hope that the Gramdhan Movement will really bring about community development though not now but at least in the immediate future. In this connection, I would request the Government to inform this House at least on some other occasion, what are the achivements of the Gramdhan Movement, how far we have succeeded and how far the Movement has achieved its objects. I think, not only this House but the whole country is going to be benefited if such a review is made by the Government.

31st March 1964] [Sri S. Nanjunda Row]

Another request that I want to make to the Government is that an outsider does not know what the Gramdhan Movement is and what a Gramdhan village is. The implications of the Gramdhan Movement, especially in the Batlagundu area in Madurai district, and the Bhoodan Yagna Bill are not understood by the hon. Members here in the House.

I understand that the Government have brought forward this amending Bill in consultation with the State Bhoodan Yagna Board. I have discussed this Bill with the Members of the Board and most of them have told me that the Government have brought forward this Bill only at their request. That is why, I wholeheartedly support this amending Bill and I wish great success to the Gramdhan Movement.

கனம் திரு. பூ. கக்கன் : *கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய திரு. சங்கரன் அவர்கள் பேசும்பொழுது, பொதுவாக இதை ஆதரிக்கிறேன், இதை ஆதரிக்கவில்லை என்ற முறையிலே பேசினார்கள். . . .*

கனம் உதவி சபாநாயகர் : *கனம் அங்கத்தினர் திருத்தங்களைப் பற்றி பேசியதையெல்லாம் அடுத்த 'ரீடிங்கில்' வைத்துக் கொள்ளலாம்.*

கனம் திரு. பூ. கக்கன் : *மதிப்பிற்குரிய திரு. நஞ்சுண்டராவ் அவர்கள் இதை ஆதரித்துப் பேசியதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு மேலே இப்பொழுது ஒன்றும் சொல்லுவதற்கு இல்லை.*

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 10 of 1964), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That clause 2 do stand part of the Bill."

THE HON. SRI P. KAKKAN : Mr. Deputy Speaker, Sir, I move—

"In clause 2, in item (ii), *for* new sub-clause (*e*), *substitute* the following sub-clause, namely :—

'(*e*) "Gramdan village" means any revenue village or villages or part or parts thereof in which—

(i) not less than two-thirds of the number of persons residing and owning lands donate all their lands for Gramdan, or

(ii) not less than one-half of the total extent of the lands owned by persons residing in such village or villages or part or parts is donated by persons residing and owning lands therein donating all their lands for Gramdan

and which the the Government may, by notification, declare to be a Gramdan village ';"

SRI N. P. SENGOTTUVELU : Sir, I move—

"In clause 2, in item (i), *for* the words 'landless poor persons', substitute the words 'landless agricultural labourers'."

'In clause 2, in item (ii), in line 6, *insert* the word 'cultivable' between the words 'includes any' and 'land'.'

SRI P. U. SHANMUGHAM : Sir, I second the amendments.

MR. DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : சட்டமன்ற துணைத்தலைவர் அவர்களே, முதல் திருத்தத்தைப் பொறுத்தவரையில், "லாண்ட் லெஸ் புவர்" என்று சட்டத்திலே இருந்தால், நிலம் இல்லாத யாரும் அந்த நிலத்தை பெறுவதற்கு உரிமை கொண்டாடுவதற்கு வசதியாக இருக்கும். "லாண்ட்லஸ் அக்ரிகல்ச்சரல் லேபரர்ஸ்" என்று இருந்தால் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நில மில்லாத விவசாயிகள் மட்டும் அந்த நிலத்தை பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்குமென்று கருதித்தான் இந்த திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அடுத்து, "எனி லாண்டு" என்பதற்கு பதி லாக "கல்டிவபிள் லாண்டு" என்று இருந்தால் தான் பூமி தானத் திற்காக நிலம் கொடுப்பவர்கள் விவசாயத்திற்கு தகுந்த நிலத்தை கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். இப்பொழுது இருக்கிறபடி இருந்தால், சாகுபடிக்கு லாயிக்கற்ற நிலத்தை கொடுத்து அரசாங் கத்திலிருந்து சில சலுகைகளைப்பெறுவதற்கு ஏதுவாக இருக்கும். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் சாகுபடிக்கு தகுதியான நிலம் என்று போடவேண்டுமென்ற திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இந்த திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் செங்கோட்டுவேலு கொடுத்திருக் கும் முதல் திருத்தம் என்ன வென்றால், இதை "கல்டிவபிள் லாண்டு" என்று மாற்றி அமைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். சாதாரணமாக கிராம தானத்திற்காக கொடுக்கும் பொழுது, "கல்டிவபிள் லாண்டு" மாத்திரம் கொடுப்பதில்லை. மாடுகள் மேய்க் கிற புல் தரை எல்லாம் கொடுக்கப்படுகிறது. ஆகவே 'கல்டிவபிள் லாண்டு' என்று மட்டும் போட்டால் அது சரியாக இருக்காது. அதனால் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அடுத்தபடியாக: "லாண்ட்லெஸ் அக்ரிகல்ச்சரல் லேபரர்ஸ்" என்று இருக்கவேண்டும், "லாண்ட்லெஸ் புவர்" என்று இருக்கிறது என்று சொன்னார்கள். "லாண்ட்லெஸ் புவர்" என்பதற்கு டெபனிஷன் கொடுத்திருக்கிறோம். "லாண்ட்லெஸ் அக்ரிகல்ச்சரல் லேபரர்ஸ்" என்பதற்கு டெபனிஷன் இல்லை. பூதானம் சம்பந்த மாக கிடைக்கிற சலுகைகள் லாண்ட்லெஸ் புவருக்கும் கிடைக்க வேண்டுமென்றுதான் சர்க்காரின் நோக்கம். விவசாயிகளாக அவர்கள் இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆகவே இந்த திருத் தத்தையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

31st March 1964]

திரு. மு. கருணாநிதி : நான் ஒரு விளக்கம் கோர விரும்பு கிறேன். தமிழ் நாட்டிலே பூமிதானமாக ஏறத்தாழ 8,000 ஏக்கர் நிலம் கிடைத்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். இதிலே விவசாயத்திற்கு தகுதியான நிலம் எவ்வளவு, மேய்ச்சல் நிலம் எவ்வளவு என்பதை அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியாகச் சொல்ல வேண்டும். இந்தவிதமான விவரங்கள் எல்லாம் இந்த மசோதா விலே இருக்காது. பொதுவாக "கிராம்தான்" என்று சொல்லி கிராமத்தை கொடுக்கும்பொழுது, அதிலே மேய்ச்சல் நிலம், கண் மாய், எதுவாய் எல்லாம் இருக்கும். "கல்டிவபிள் லாண்டு" தான் கிராமதானம் என்று சொல்லமுடியாது.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு: நான் ஒரு விளக்கம் கோர விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியவாறு அதிலே மேய்ச்சல் தரை இருந்தால், அந்த மேய்ச்சல் தரையை திருத்துவதற்கு அரசாங்கம் கடன் உதவியளிக்கிறதா ? அதோடு "லாண்டுலெஸ் புவர்" என்று இருந்தால் விவசாயத்திலே ஈடு படாத நிலம் இல்லாதவர்கள் கூட அந்த நிலத்தை பெற முடியும். ஆகவே முதலிலே விவசாயத் தொழில் தெரிந்தவர்களுக்கு நிலத் தைக் கொடுத்துவிட்டு, பிறகு நிலம் இல்லாதவர்களுக்கு கொடுக்க லாம் அல்லவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று தன் னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகிறார். சர்க்காருடைய நோக்கம், நிலம் இல்லாத ஏழைகளுக்கு கொடுக்கவேண்டும் என்பதுதான்.

The amendments of Sri N. Sengottuvelu were put and lost.

The Government amendment was put and carried.

Clause 2, as amended, was put and carried.

Clauses 3 to 8 were put and carried.

Clause 9.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That clause 9 do stand part of the Bill."

திரு. வை. சங்கரன் : இந்த 9-வது பிரிவிலே ரெஜிஸ்டிரேஷன், ஸ்டாம்பு ட்யூடியிலிருந்து விலக்கு அளிப்பதைப் பற்றி சொல்லப் பட்டிருக்கிறது. ரெஜிஸ்டிரேஷன் வேண்டியதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள், இது நடந்துள்ள கேஸ்களுக்குத்தான் அப்ளிகபிளாக இருக்குமென்று சொன்னார்கள் ஏற்கெனவே இம்மாதிரி கேஸ்கள் கோர்ட்டுகள் வரைக்கும் போய், ரெஜிஸ்டிரேஷன் செய்யவில்லை என்பதற்காக இன்வேலி டேட் ஆனவைகளை வாலிடேட் செய்யலாமென்று சொல்லியிருக் கிறார்கள். பின்னால் கூட இந்த மாதிரி கேஸ்கள் வரலாம். இதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்,

[திரு. வை. சங்கரன்] [31st March 1964

It will be construed as having been made or deemed to have **been made.** அதாவது,

Notwithstanding anything contained in any other law, every declaration and every grant of land made or deemed to have been made under this Act shall be and be deemed always to have been exempt from registration and payment of stamp duty and of encumbrance certificate fee.''

என்று இருக்கிறது. ஆகையால் நடந்ததற்கு மட்டும் வேலிடேட் பண்ணுவதாக இல்லை. இனி வருவதற்கும் வேலிடேட் பண்ணு வதற்காகத்தான். பின்னர் வருவதற்கும் ரெஜிஸ்டிரேஷன் வேண்டியதில்லை என்றும் பொருள்படுகிறது. இதனால் ஏற்படும் நன்மையை நான் மறுக்கவில்லை. ஆனால் நடைமுறையில் கஷ்டப் படி இருக்கிறது. கஷ்டத்தைப் போக்குவதற்கு வேண்டியதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டோனர்கள் எல்லோரும் நல்லவர்களாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. பூமிதானத்திற்காக எழுதிக் கொடுத்துவிட்டு, அதே நிலத்தை விற்க முற்படலாம். ரெஜிஸ்டிரேஷன் பண்ணவிட்டால், "It will not be known to the outside world" ரெஜிஸ்டிரேஷன் ஃபீஸ் செலுத்த வேண்டிய அவசியமில்லை. பார்மாலிடி ஆப் ரெஜிஸ்டிரேஷன் வேண்டாமென்று சொன்னால், தப்புத் தவறுகள் ஏற்பட்டால் என்ன பண்ணுகிறது? "ரெஜிஸ்டி ரேஷன் ஃபீ" வேண்டாம் என்று இருந்தால் மட்டும் போதாதா?

